# எங்கள் நடத்தை விதிகள்

## GE Vernova-இல் நாங்கள் எவ்வாறு ஒன்றாகச் செயல்பட்டு வெல்கிறோம்

GE VERNOVA

# உள்ளடக்கம்

## அறிமுகம்

எங்கள் தலைவர்களிடமிருந்து ஒரு குறிப்பு 2
நடத்தை விதிகள் என்றால் என்ன? அது யாருக்கானது? 3
எங்கள் எதிர்பார்ப்புகள் 4
ஊழியர் பொறுப்புகள் 5
ஊழியர்களின் தலைவர்பொறுப்புகள் 6

## நன்னெறியுடன் செயல்படுதல்

நெறிசார் முடிவுகளை எடுத்தல் 7
குரல் கொடுத்தல் 9

## செயலில் உள்ள எங்கள் நடத்தை விதிகள்

நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல் 12
நலன் முரண்பாடுகள் 14
பரிசுகள், பொழுதுபோக்கு, விருந்தோம்பல் 15
இலஞ்ச எதிர்ப்பு 17
நியாயமான போட்டி 18
சர்வதேச வர்த்தகம் 19
வழங்குநர் ஈடுபாடு 21
அரசு அமைப்புகளுடனான தொடர்புகள் 22
பொறுப்பேற்கச் செய்தல் 23
நிலைத்தன்மை 24
மனித உரிமைகள் 25
சுற்றுச்சூழல், சுகாதாரம், பாதுகாப்பு 26
பாதுகாப்பு 27
தரம் 28
துல்லியமான பதிவு பேணுகை 29
நிறுவனத்தையும் ஒருவருக்கொருவருமென பாதுகாத்தல் 30
தகவல் பாதுகாப்பு 31
செயற்கை நுண்ணறிவு 32
சமூக ஊடகம் 33
இணையப் பாதுகாப்பு 34
தனியுரிமை 35
அறிவுசார் சொத்து 36
சட்டவிரோத பணப்பரிமாற்றத் தடுப்பு 37
உள்வழித் தகவல் மூலம் வர்த்தகம் 38

## குறைகளைப் புகாரளிப்பதற்கான வழிகள்

வளங்கள் 39

எங்கள் தலைவர்களிடமிருந்து ஒரு குறிப்பு

# நன்னெறியுடன் உலகை மாற்றுவதற்கான சக்தி



**ஸ்காட் ஸ்ட்ராசிக்,**
தலைமைச் செயல் அதிகாரி,
GE Vernova



**எலிசபெத் மெக்பிரைட்,**
தலைமை இணக்க அதிகாரி,
GE Vernova

GE Vernova-வில், நாங்கள் உலகை மின்மயமாக்கி வளமடையவும் கார்பன் உமிழ்வைக் குறைக்கவும் கொண்டுள்ள பணிக்காக, செயல்பாட்டு மற்றும் தொழில்நுட்பச் சிறப்புமட்டும் அல்லாமல், நேர்மைக்கான எங்களின் அசைக்க முடியாத உறுதிப்பாடும் தேவைப்படுகிறது. மேலும், எங்கள் நடத்தைச் சட்டம் (Code of Conduct) எங்கள் பணியை எவ்வாறு நிறைவேற்றுகிறோம் என்பதற்கான வழிகாட்டியாக செயல்படுகிறது — எங்களிடமிருந்தும் எங்கள் கூட்டாளிகளிடமிருந்தும் எதை எதிர்பார்க்கிறோம் என்பதைக் காட்டுகிறது.

விழுமியங்களை முன்னெடுத்துச் செல்லும் நிறுவனமாக, நமது நடத்தை விதிகள் GE Vernova வழியை ஏற்றுக் கொண்டுள்ளது. நாம் ஒவ்வொருவரும் நன்னெறியுடன் செயல்படும்போது ஒரு வலுவான கலாச்சாரத்தை உருவாக்குவதில், நமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில், நமது சமுகங்களுக்குச் சேவையாற்றுவதில், நமது செயல் இலக்கை நிறைவுசெய்வதில் நாம் பங்களிக்கிறோம். இந்த விதிகள் நம் அனைவருக்குமான திசைகாட்டி: சிக்கல்களில் நமக்கு வழிகாட்டுகிறது, நம்பிக்கையுடன் நாம் குரல் கொடுக்க ஊக்குவிக்கிறது, நோக்கத்துடனும் பொறுப்புணர்வுடனும் நாம் செயல்பட உதவுகிறது.

இந்த விதிகள் உங்களை ஆதரிப்பதற்காக வடிவமைக்கப்பட்டவையே தவிர, உங்களைக் கட்டுக்குட்படுத்துவதற்காக அல்ல. உங்கள் அன்றாடப் பணியில் ஓர் ஆதாரமாக இருப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு நாளும் முடிவெடுத்தலை நன்னெறியுடன் நீங்கள் அணுகமுடியும். தயவுசெய்து இதைப் படித்துப் புரிந்துகொண்டு பயன்படுத்துங்கள். ஒரு சிறந்த உலகுக்கு நாம் ஒன்றாகச் சக்தியளிக்கவும் மாற்றத்தின் சக்தியை முன்னெடுத்துச் செல்லவும் உதவுவதற்காக நீங்கள் சரியான முடிவுகளை எடுத்து நமது மதிப்புகளைப் பின்பற்றி வாழ உங்களுக்கு ஆற்றலை அளிக்க விரும்புகிறோம்.



# நடத்தை விதிகள் என்றால் என்ன? அது யாருக்கானது?

இந்த நடத்தை விதிகள் நம் திசைகாட்டி. நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதில் வழிகாட்டுகிறது. இது நம் அனைவருக்கும் பொருந்தும். நாம் அதை அறிந்துகொண்டு, புரிந்து அதன்படி நடக்க வேண்டும்.

GE Vernova-வின் இலக்கு செழிப்படையவும் கரியமில வாயுவைக் குறைக்கவும் மின்மயப்படுத்தி மேலும் நம்பகமான, கட்டுப்படியான, நீடித்த எரிசக்திக்கும் மாறுவதை வேகப்படுத்துவதாகும். இதை ஓரணியாக இருந்து புதுமை படைத்தல் வாயிலாக நன்னெறியுடன் செய்கிறோம்.

நமது வெற்றி உலகெங்கிலும் GE Vernova வழியில் பணியைச் செய்ய உறுதிகொண்டுள்ள நம் ஊழியர்கள் அனைவரையும் சார்ந்துள்ளது. இந்த ஐந்து கொள்கைகள் நமது நோக்கத்தை, பங்குதாரர்களுக்கு மதிப்பை ஈட்டித் தருவதில், அளவிடத்தக்க நீடித்த வெற்றியை எட்டுவதில் நமது தனித்துவமான வழியைப் பிரதிபலிக்கின்றன.

## எங்கள் GE VERNOVA வழி

**நாங்கள் புதுமை படைக்கின்றோம்**
உலகை மின்மயமாக்கவும் கரியமில வாயுவைக் குறைக்கவும் நாங்கள் செய்யும் அனைத்திலும்

**எங்கள் வாடிக்கையாளர்களுக்குச் சேவைபுரிகின்றோம்**
பரஸ்பர வெற்றி மற்றும் நீண்டகாலத் தாக்கத்தில் பெருமையுடன் கவனம் செலுத்துகின்றோம்

ஒவ்வொருநாளும் மேலும் சிறப்பாகச் செயல்பட எங்களுக்கு நாங்களே சவாலை முன்னிறுத்துகிறோம்
**வீணாதலைத் தவிர்ப்பதே நாங்கள் செயல்படும் முறை**

எல்லைகளைத் தகர்த்துத் தாண்டிச் செல்கிறோம்
**ஓரணியாக வெல்வதற்கு**

**நாங்கள் பொறுப்பு**
எங்கள் நோக்கம் மற்றும் வாக்குறுதிகளை நிறைவேற்ற தனித்தனியாகவும் கூட்டாகவும் செயல்படுகின்றோம்

## அது என்ன?

ஒவ்வொரு நாளும் GE Vernova வழியில் - நாம் எவ்வாறு பேசுகிறோம், நடந்துகொள்கிறோம், முடிவுகளை எடுக்கிறோம் என்பது வாயிலாக - நாம் வாழ்வதற்கு நன்னெறி கலாச்சாரத்தில் செழித்து வளர நமது வழிகாட்டியாக நடத்தை விதிகள் உள்ளன.

நமக்குள் ஒருவரையொருவர் எப்படி நடத்துகிறோம், மற்றவர்களை எப்படி நடத்துகிறோம், நமது நிறுவன மதிப்புகளை உயர்த்திப் பிடிக்கிறோம் என்பதற்கான தெளிவான எதிர்பார்ப்புகளை இது அமைக்கிறது. இது நமது மதிப்புகளை நிகழ் வாழ்வின் நடத்தையோடு இணைத்து எளிதாக இல்லாதபோதும் சரியானதை நாம் செய்ய உதவுகிறது.

நமது நடத்தை விதிகள் நாம் செயல்படும் ஒவ்வொரு நாட்டின் சட்ட ஒழுங்குமுறைகளுக்கு இணங்கி நடப்பதில் நம் அனைவருக்குமான பொறுப்பினை வலியுறுத்தவும் செய்கிறது. இந்த உறுதிப்பாடு நமக்குள்ளும், நமது நம்பிக்கைக்குரிய தொழில் கூட்டாளிகளுடனும், உலகெங்கிலும் நாம் வாழும் மற்றும் இயங்கும் நாடுகள் மற்றும் சமூகங்களுடன் நாம் ஈடுபடும் விதத்தில் நன்னெறியுடன் செயல்படுவதற்கான நமது வாக்குறுதியைப் பிரதிபலிக்கிறது.

ஒவ்வொரு சாத்தியமான சூழ்நிலையையும் இந்த நடத்தைவிதிகள் விவரிக்கவில்லை என்றாலும், GE Vernova-வில் பணிபுரியும்போது நெறிசார் முடிவெடுத்தலுக்கான கொள்கைகளை இது உங்களுக்கு வழங்குகிறது. நமது எதிர்பார்ப்புகளை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பதற்கான குறிப்பிட்ட தகவல்களை நமது கொள்கைகள் வழங்குகின்றன. ஒவ்வொரு தொடர்புடைய பிரிவிலும் பொருந்தக்கூடிய கொள்கைகளுக்கான இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சந்தேகம் எழும்போது வழிகாட்டுதலுக்கு சம்பந்தப்பட்ட வளங்களைப் பாருங்கள்.

## இது யாருக்கானது?

இந்த நடத்தை விதிகள் மற்றும் அதன் தொடர்புடைய கொள்கைகள் நமக்காகப் பணிபுரிவோர் அல்லது நம் சார்பில் செயல்படும் அனைவருக்கும் பொருந்தும். இதில் GE Vernova இயக்குநர்கள், அதிகாரிகள், ஊழியர்கள், துணை நிறுவனங்கள் மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள இணை நிறுவனங்கள் அடங்கும்.

ஆலோசகர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், விநியோகிப்பாளர்கள், சுயேச்சை ஒப்பந்ததாரர்கள் போன்ற மூன்றாம் தரப்பினருடன் நாம் செயல்படும்போது அவர்கள் GE Vernova-வின் நடத்தை விதிகள் மற்றும் கொள்கைகளின் தொடர்புடைய அம்சங்களைப் புரிந்துகொண்டு இணங்குவதை நாம் உறுதிசெய்கிறோம்.

அனைத்து ஊழியர்களும் நமது நடத்தை விதிகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்களைப் பின்பற்றவும் ஒவ்வொரு முடிவிலும் தொடர்பாடலிலும் நன்னெறியுடன் நடந்துகொள்வதையும் நாம் எதிர்பார்க்கிறோம்.

நடத்தை விதிகளின் தேவைகளுக்கு இணங்காத ஊழியர்கள் பொருந்தக்கூடிய உள்நாட்டுச் சட்டங்கள், கொள்கைகள், ஒப்பந்தங்களின்படி பணி முறிவு உள்ளிட்டவை வரையிலும் ஒழுங்குமுறை நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

### மேலும் வழிகாட்டுதல்

→ வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் & ஆலோசகர்களுக்கான GE Vernova நன்னெறி வழிகாட்டி: GE Vernova வழங்குநருக்கான நடத்தை விதிகள்

# எங்கள் எதிர்பார்ப்புகள்

வேலையைச் சரியாகச் செய்துமுடிப்பது என்றால் நமக்குநாமே கைதேர்ந்தவராக, நேர்மையுடனும் நெறியுடனும் நடந்துகொள்வதைக் குறிக்கிறது.

உலகை மாற்றும் சக்தி நம்மிடம் உள்ளது. இது நாம் வேலையில் எவ்வாறு நடந்துகொள்கிறோம் என்பதிலிருந்து தொடங்குகிறது: நாம் வேலையைச் சரியாகச் செய்துமுடிக்கிறோம், ஒவ்வொரு நாளும். அதாவது நாம் செய்யும் அனைத்திலும் மரியாதையை, பொறுப்புணர்வை, நெறியை வெளிப்படுத்துகிறோம் என்று அர்த்தம்.



எங்கள் எதிர்பார்ப்புகள்

# ஊழியரின் பொறுப்புகள்

## ஒரு மரியாதைக்குரிய பணியிடத்தைப் பேணி வளர்த்தல்



ஊழியர்களாக, மிக உயர்ந்த நெறிசார் தரநிலைகளை உயர்த்திப் பிடிப்பதிலும் மரியாதையான பணியிடத்தைப் பேணுவதிலும் நாம் ஒவ்வொருவரும் முக்கியப் பங்கினை வகிக்கிறோம்.

GE Vernova வழியின் கொள்கைகளுள் ஒன்றாக ஓரணியாக வெற்றிபெறுதல் உள்ளது. நம் அனைவரிடமும் ஒரு பத்திரமான, நியாயமான, மரியாதையான பணியிடம் உள்ளது. எனவே நாம் எந்தவிதமான பாகுபாட்டையும் வம்பிழுத்தலையும், பாலியல் துன்புறுத்தலை அல்லது இனம், நிறம், மதம், தேசியம் அல்லது இனத் தோற்றம், பாலினம், பாலின அடையாளம், பாலியல் நோக்கு, திருமண நிலை, வயது, ஊனம், இராணுவப் பதவி அல்லது சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட வேறு ஏதேனும் பண்பு சார்ந்த துன்புறுத்தலையும் நாம் தடைசெய்கிறோம்.

### நடைமுறையில்

நடத்தை விதிகளை மதித்து நடப்பது என்றால், நாம்:

- **வேலைக்குத் தகுதியானவராகவும்**, பாதுகாப்பாகவும், கவனத்துடனும், எவ்விதக் குறைபாடுகளும் இல்லாமலும் பணிக்கு வருவது
- இந்த நடத்தை விதிகள் உள்ளிட்ட நமது வேலைக்குப் பொருந்தும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை **அறிந்து பின்பற்றுவதும்** தேவையான பயிற்சிகளை சரியான நேரத்தில் முடிப்பதும்
- ஏதாவது பார்ப்பதற்கு சரியில்லாததாகத் தோன்றினால் **குரல் கொடுப்பது**
- உள்ளக அல்லது ஒழுங்குமுறை விசாரணைகளுக்கு முழு **ஒத்துழைப்புத்** தருதல்
- நன்னம்பிக்கையுடன் ஒரு குறையைத் தெரிவிக்கும் ஒருவர் மீது **பழிவாங்கும் நடவடிக்கையை ஒருபோதும் எடுக்காதிருத்தல்**
- உங்கள் பகுதியில் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் GE Vernova-வின் இணக்கத்தைப் பாதிக்கக்கூடிய அல்லது நற்பெயருக்கு ஆபத்தைச் சேர்க்கக்கூடிய உருவாக்கங்கள் அல்லது மாற்றங்கள் பற்றி **விழிப்போடிருங்கள்**

**கே** **நான் ஆதரிக்கும் ஓர் அணி தனது நெருக்கடியான காலக்கெடுவை பூர்த்திசெய்யும் அழுத்தத்தில் உள்ளது. நேரத்தை மிச்சப்படுத்த நமது சீராய்வு நடைமுறையில் ஒரு படியைத் தவிர்க்கும்படி மேற்பார்வையாளர் ஒருவர் குறிப்பைத் தருகிறார். அது எனது நேரடிப் பொறுப்பில் வராது என்றாலும் எனக்குக் கவலையளிக்கிறது. நான் ஏதாவது சொல்ல வேண்டுமா?**

ஆம். பணி அல்லது புகாரளிக்கும் விதம் எவ்வாறாக இருந்தாலும் நிறுவனத்தின் நன்னெறியைக் காப்பதில் நம் அனைவருக்கும் பொறுப்பு உள்ளது. இணங்காமை ஆபத்தை ஏற்படுத்தும் சுருக்கு வழிகள் அல்லது நடத்தைக்கான சாத்தியம் குறித்து உங்களுக்குத் தெரியவந்தால் - குறிப்பாக அது பாதுகாப்பு அல்லது தரத்தைப் பாதிக்குமென்றால் - நீங்கள் குறைபாட்டை எழுப்ப ஊக்குவிக்கப்படுவதோடு மட்டுமின்றி அது எதிர்பார்க்கவும் படுகிறது. நீங்கள் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்காவிட்டாலும்கூட அமைதி காப்பது நிறுவனத்தை ஆபத்துக்கு உள்ளாக்கும்.


### மேலும் வழிகாட்டுதல்

GE VERNOVA வழி
மரியாதைக்குரிய பணியிடக் கொள்கை

## எங்கள் எதிர்பார்ப்புகள்

# மக்கள் தலைவர் பொறுப்புகள்

## நன்னெறிக் கலாச்சாரத்தைப் பேணுதல்



மக்கள் தலைவர்கள் நமது கலாச்சாரத்தை எதிர்பார்ப்புகளை அமைத்தும் வலியுறுத்தியும் முன்னுதாரணமாக இருந்தும் வடிவமைக்கின்றனர்.

GE Vernova அதன் மக்கள் தலைவர்களை இணக்கக் கலாச்சாரத்தைப் போஷிப்பதற்குப் பொறுப்பாக்குகிறது. இதில் நன்னெறியுடன் வழிநடத்துவது, முன்மாதிரியான நடத்தைகள், GE Vernova வழியை ஏற்பது, ஒவ்வொருவரும் நடத்தை விதிகளைப் புரிந்துகொண்டு பின்பற்ற உதவுவது அடங்கும். மக்கள் தலைவர்கள் மற்றவர்களுக்கு இந்தத் தொனியையும் எதிர்பார்ப்புகளையும் அமைப்பதினால் நன்னெறியுடன் தலைமை தாங்குவதில் உயர் தரநிலையைப் பின்பற்றும் பொறுப்பு அவர்களுக்கு உள்ளது.

### நடைமுறையில்

நடத்தை விதிகளை மதித்து நடப்பது என்பது:

- பாகுபாடு, துன்புறுத்தல் அல்லது தொல்லைதருதலைச் சகித்துக்கொள்ளாத **ஒரு பணியிடத்தைப் பேணுவது**
- உள்நிலை காலக்கெடுக்கள், வாடிக்கையாளரின் தேவைகள் அல்லது செயல்திறன் அளவீடுகளைப் பூர்த்தி செய்வதற்காக முடிவெடுத்தலில், செயல்களில், தகவல் தொடர்பில் **நெறியுடன் நடந்துகொள்வதும்** நன்னெறியில் ஒருபோதும் சமரசம் செய்துகொள்ளாதிருப்பதும்
- அனைவரிடமிருந்தும் கேள்விகளை, குறைகளை, அபிப்பிராயங்களைத் தருமாறு ஊக்குவித்து **ஆழமான நம்பிக்கையைக் கட்டமைத்தல்**
- சிக்கல் எழும்போது **உடனடியாகவும்** விடாமுயற்சியுடனும் செயல்படுதல் மற்றும் என்ன செய்வது என்று தெரியாதபோது உதவியை நாடுதல்
- அணிக்கு **தெளிவான எதிர்பார்ப்புகளை அமைப்பதும்** அவர்களைப் பொறுப்பேற்கச் செய்வதும்
- கொள்கைகள் மற்றும் நடத்தை விதிகளில் மீறல்களைத் **தடுத்தல் கண்காணித்தல், மேலே கொண்டுசெல்லுதல், எதிர்வினையாற்றுதல்**
- **வெளிப்படையாகப் புகாரளிப்பதை ஊக்குவிப்பதும்** ஒரு குறைபாட்டை எழுப்புவது எப்படி என்று ஊழியர்கள் தெரிந்திருப்பதை உறுதிசெய்வதும்

**கே**

**எனது ஊழியர்களில் ஒருவர் ஒரு கொள்கை மீறலை எழுப்பாத ஆனால் அது தொந்தரவளிக்கும் நடத்தைப் பாங்கினைச் சுட்டிக்காட்டக்கூடிய ஒரு சூழ்நிலையைத் தெரிவித்தார். எந்த முறைசார் விதியும் மீறப்படவில்லை - இதை நான் மேலே எடுத்துச் செல்ல வேண்டுமா?**

ஆம். ஒரு தலைவராக, நீங்கள் சாத்தியமான தவறான நடத்தை அல்லது பணியிடச் சிக்கல்களின் ஆரம்ப அறிகுறிகளை அடையாளம் காணவும் குறைபாடுகளை முறையாக மேலெடுத்துச் செல்லவும் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது - அவை ஒரு தெளிவற்று இருந்தாலும்கூட. உங்கள் பணியில் மரியாதையான பணியிடத்தை, நெறிசார் கலாச்சாரத்தைப் போஷிப்பதும் பழிவாங்குவதில் இருந்து ஊழியர்களைக் காப்பதும் சரியான நபர்களால் சரியான உள்நிலை நடைமுறைகள் வாயிலாகப் பிரச்சினைகள் கையாளப்படுவதை உறுதியளிப்பதும் அடங்கும். "குறைவான அபாயம்" உடையதாகத் தோன்றும் பாங்குகளைப் புறக்கணிப்பது காலப்போக்கில் பெரிய பிரச்சினைகளாக உருவாகச் செய்துவிடும். எனவே முன்னதாக, அடிக்கடி சிக்கல்களைத் தெரிவியுங்கள்

### மேலும் வழிகாட்டுதல்

நன்னெறிக்கு மக்கள் தலைவரின் வழிகாட்டுதல்


# நெறிசார் முடிவுகளை எடுத்தல்

நமது பொறுப்புணர்வுக் கலாச்சாரத்தில் வாழ்தல் நாம் பின்னால் நிற்கக்கூடிய ஆழ்ந்து சிந்தித்து கொள்கைப்பூர்வ முடிவுகளை எடுக்கும்போது துவங்குகிறது.

சில நேரங்களில் நாம் முடிவெடுக்க வேண்டியிருக்கும்போது சரியான பாதை தெளிவின்றி இருக்கலாம். ஒரு கொள்கையை எவ்வாறு புரிந்துகொள்வது அல்லது செயல்படுத்துவது என்று நமக்கு உறுதியாகத் தெரியாமல் போகலாம் அல்லது நமது கொள்கைகளுடன் பொருந்தாத சிரமமான சூழலை எப்படிச் சமாளிப்பது என்பதில் முரண்பாட்டை நாம் உணரலாம்.

சிக்கல் என்னவாக இருந்தாலும், நாம் எடுக்கும் தெரிவுகளுக்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாகிறோம்.

பொறுப்புணர்வு என்பது நமது செயல்களுக்கு உரிமை எடுத்துக் கொள்வதும் அவை நமது நிறுவன விழுமியங்களுக்கும் நம்மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்கு இணங்கி இருப்பதையும் உறுதிசெய்வதாகும். பின்வரும் பக்கத்திலுள்ள முடிவெடுத்தலுக்கான வழிகாட்டுதல் சரியான பயன்விளைவை - நமது நன்னெறிக் கலாச்சாரத்தைப் பேணவும் நமது இலக்கு மற்றும் பிராண்டுடன் இணங்கக்கூடியதை - நாம் அடைய உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.



# முடிவெடுப்பதற்கான வழிகாட்டுதல்

## உறுதியாகத் தெரியவில்லை

உதவி கேளுங்கள். சரியான வழியைக் கண்டறியுங்கள். நமது விழுமியங்களுக்கு, சட்டத்திற்கு, நமது கொள்கைகளுக்கு, நடைமுறைகளுக்கு இயைந்ததாக முடிவு இருப்பது உறுதியாகத் தெரியும்வரை செயல்பட வேண்டாம்.

கேளுங்கள். செயல்படும் முன்பு, அதன் தாக்கங்களையும் பின்விளைவுகளையும் புரிந்துகொள்ளுங்கள். மற்றவர்கள் பொதுமக்களாக இருந்தால், அவர்களால் உங்கள் செயல்கள் எவ்வாறு பார்க்கப்படும் என்பதைப் பரிசீலியுங்கள்.

?

**1**

இது நமது விழுமியங்களுக்கு இணங்க உள்ளதா?

இது சட்டத்திற்கும், நமது கொள்கைகளுக்கும், நடைமுறைகளுக்கும் இணங்க உள்ளதா?

**ஆம்: அடுத்த கேள்வி**

**2**

அது சரியானதாகத் தோன்றுகிறதா? உங்கள் செயல்கள் பொதுப் பார்வைக்கு வந்தால் என்னாகும்?

இது GE Vernova நிறுவனத்திற்கும் உங்கள் நற்பெயருக்கும் பெருமை சேர்க்குமா?

**ஆம்: அடுத்த கேள்வி**

**3**

உங்கள் முடிவுக்கு பொறுப்பேற்க நீங்கள் தயாராக உள்ளீர்களா?

**ஆம்: அடுத்த கேள்வி**

✓

தொடருங்கள்.

×

## இல்லை

நிறுத்துங்கள். விதிவிலக்குகளே இல்லை.

உதவி கேளுங்கள்; உங்கள் மக்கள் தலைவர் அல்லது நெறிகள் & இணக்கக் குழுவிடம் எடுத்துச் செல்லுங்கள் அல்லது வேறு வழியைக் கண்டறியுங்கள்.

# குரல் கொடுத்தல்

உங்கள் குரல் முக்கியம். ஒரு குறையைத் தெரிவிப்பது எளிமையானதும் நேரடியானதுமாகும். இது அனைத்து ஊழியர்களிடமும் எதிர்பார்க்கப்படுகிறது.

நமது நன்னெறிக் கலாச்சாரத்தின் அடித்தளமாக குரலெழுப்புதல் உள்ளது. நாம் ஒன்றிணைந்து நெறிசார்ந்தும் மரியாதையுடனும் எவ்வாறு பணிபுரிகிறோம் என்பதற்கான தூணாக அது உள்ளது. குரல் கொடுக்கும் கலாச்சாரம் என்பது ஒவ்வொரு தனிநபரின் குரலும் மதிக்கப்படும் சூழலை உருவாக்குவதாகும். ஒருவர் குரல்கொடுக்கும்போது, அது மற்றவர்களும் அதையே செய்வதற்கான வெளியை உருவாக்குகிறது.

நமக்குக் கேள்விகளோ அல்லது குறைகளோ இருப்பின் நாம் சரியான விசயத்தைச் செய்வதும் குரல் கொடுப்பதும் நம்பிக்கையை உருவாக்குவதற்கு அவசியம். சரியான விசயத்தை உங்களுக்குச் செய்யத் தெரியவில்லை எனில், உங்கள் மக்கள் தலைவரிடம் அல்லது நெறிகள் & இணக்கக் குழுவிடம் ஆலோசனை கேளுங்கள்.



# குரல் கொடுத்தல்

நமது நடத்தை விதிகள், கொள்கைகள் அல்லது சட்டத்தை மீறுகிற அல்லது மீறும் சாத்தியமுள்ள செயலை நீங்கள் பார்த்தால், சந்தேகித்தால் அல்லது உங்களிடம் கூறப்பட்டால் அதை நீங்கள் புகாரளிக்க வேண்டும். புறம் திரும்பிக் கொள்வது அல்லது இன்னொருவர் வழிநடத்தும்படி விட்டுவிடுவது எளிதானதாகத் தோன்றலாம். ஆனால் நெறியற்ற அல்லது சட்டத்துக்குப் புறம்பான நடத்தை நம் அனைவரையும் பாதிக்கிறது. அது நிறுவனத்தையும் பாதிக்கும்.

ஒரு நிறுவன விசாரணை நடைபெறும்போது, ஊழியர்கள் முழுவதுமாக நேர்மையுடன் ஒத்துழைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில் நேர்காணலில் பங்கெடுப்பது, கேள்விகளுக்கு உண்மையாகப் பதிலளிப்பது அல்லது தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்களை வழங்குவதும் அடங்கலாம். இதில் தரவுகள், கணக்குகளை உருவாக்குவது மற்றும் நிறுவனத்திற்கு வணிகம் தொடர்பான கடிதத்தொடர்புகள் மற்றும் பதிவுகள் இருக்கிற சாதனங்களை அணுகக்கூடியபடி செய்வதும் அடங்கும்.

ஒத்துழைப்பதால் சிக்கல்களை நேரத்திற்கு முழுமையாக, சரிவர சீராய்வு செய்வதற்கு உதவுகிறது. ஒத்துழைக்கத் தவறுவதால் விசாரணை நடைமுறையின் நேர்மைக்குக் குந்தகம் விளையலாம்.

## ஒரு குறையைப் புகாரளிக்க

எங்கள் ஒருமைப்பாட்டுக்கான இணையவாயில், மின்னஞ்சல் அல்லது உதவி எண்

உங்கள் குறைகேள் அதிகாரி

மக்கள் தலைவர்கள்

மனித வளங்கள்

நெறிகள் & இணக்கம்

சட்டம்

## தெரிந்துகொள்வது நல்லது

குறைபாட்டு வகைகளுக்கான உதாரணங்கள்:

- ஒரு சக பணியாளரின் இனம், பாலினம் அல்லது மதம் குறித்து தொடர்ந்து புண்படுத்தும் நகைச்சுவைகள் அல்லது கருத்துகள் விரோதமான பணிச்சூழலை உருவாக்குகிறது
- முறையற்ற வருவாய்க் கணக்கீடு அல்லது பிற நிதிசார் அறிக்கையிடல் புகார்கள்
- வழங்குநரைத் தேர்ந்தெடுத்தல் நடைமுறை பின்பற்றப்படவில்லை
- ஒரு மேற்பார்வையாளர் தவறான முன்னெடுப்புகளை ஒரு பணியாளரிடம் செய்கிறார் அல்லது அத்தகு நடத்தையை ஏற்பதைப் பொறுத்து பதவி உயர்வை உட்கிடையாகக் குறிப்பிடுகிறார்
- ஒரு பாதுகாப்பு அல்லது இணக்கப் பிரச்சினை காரணமாக வேலையை பாதியில் நிறுத்தியதற்காக பழிவாங்குதல்
- நலன் முரண்பாடுகளுக்கான சாத்தியம்



# குரல் கொடுத்தல்

இருக்கக்கூடிய ஏதேனும் சேனல்கள் வாயிலாக நீங்கள் அநாமதேயமாகவும் குறையைப் புகாரளிக்க விரும்பலாம் - பெயர் இருந்தாலும் இல்லாவிடினும் அனைத்துப் புகார்களையும் நாங்கள் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம். உங்கள் பெயரைத் தெரிவிப்பதில் உங்களுக்குச் சங்கடமில்லை எனில், அது கேள்விகளைப் பின் தொடரவும் நிலையை உங்களுக்குத் தொடர்ந்து தெரியப்படுத்தவும் எங்களை அனுமதிக்கும். உங்கள் அடையாளம் முடிந்தவரை முழுமையாக இரகசியமாக வைத்திருக்கப்படும். நீங்கள் ஒரு குறையை அநாமதேயமாக எழுப்பத் தேர்வுசெய்தால், உங்களால் முடிந்த அளவு விபரங்களை வழங்குங்கள் (உ.ம்., பெயர்கள்/SSOகள், இருப்பிடம் மற்றும் பிற தொடர்புடைய விபரங்கள் போன்றவை)

## *குரல் கொடுப்பதற்கான பாதுகாப்பு*

நன்னம்பிக்கையுடன் பட்டியலிடப்பட்ட சேனல்கள் வாயிலாகக் கேள்விகளைக் கேட்கிற அல்லது குறைகளைப் புகாரளிக்கிற எந்த ஊழியருக்கு எதிராகப் பழிவாங்குவதை நாங்கள் தடைசெய்கிறோம். பழிவாங்குவதில் பங்கேற்பதாகக் கண்டறியப்படும் ஊழியர்களுக்கு எதிராக, பணி நீக்கம் உள்ளிட்டவை வரையிலான முறையான நடவடிக்கையை நாங்கள் எடுக்கிறோம். நீங்கள் பழிவாங்கப்பட்டதாக நம்பினால், தயவுசெய்து நெறிகள் & இணக்கக் குழுவை உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

## விசாரணைகளின் நடைமுறை[1]

**1 புகார் எழுப்பப்பட்டது**

பணியாளர் ஒரு சேனல் வழியாக குறையைப் புகாரளிக்கிறார். குறைகேள் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்டதற்கான உறுதிப்படுத்தலைப் பெறுகிறார்.

**2 விசாரணை அதிகாரி நியமிக்கப்படுகிறார்**

புகார் பதியப்பட்டு விசாரணை அதிகாரி நியமிக்கப்படுகிறார்.

**3 விசாரணை நடத்தப்படுதல்**

விசாரணை அதிகாரி நேர்காணல்களை நடத்தி ஆதாரங்களைத் திரட்டி, ஆரம்பகட்ட அறிக்கையில் பெற்ற தகவல்களைப் பொறுத்து சாத்தியப்படுமிடத்து கண்டறிந்தவற்றைத் தொகுத்து அளிக்கிறார்.

**4 கண்டறிந்தவை ஆவணப்படுத்தப்படுதல்**

விசாரணை முடித்தல் அறிக்கையில் விசாரணையில் கண்டறிந்தவை அனைத்தும் ஆவணப்படுத்தப்படும்.

**5 திருத்த நடவடிக்கை பரிந்துரைக்கப்பட்டது[2]**

மனிதவள மேலாண்மை மற்றும்/அல்லது மக்கள் தலைவரிடம் திருத்த நடவடிக்கை பரிந்துரைக்கப்படும்.

**6 குறைபாட்டை எழுப்பியவருக்கு பின்னூட்டம்**

குறையை எழுப்பியவர் தொடர்பு தகவல்களைத் தந்திருந்தால், முடிந்த அளவுக்கு பின்னூட்டம் வழங்கப்படும்.

1 நெறிகள் & இணக்கக் குழு முடிப்பதற்கான சராசரி நாட்களைக் கண்காணிக்கிறது. இதற்கான இலக்கு 60 நாட்கள்.

2 அனைத்து நன்னெறி தொடர்பான புகார்களும் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில் முடிவதில்லை. பல சமயங்களில் கூட்டுப் பயிற்சி, தகவல்தொடர்பு, பயிற்சி அல்லது நிறுவனத்தை ஊழியர்களுக்கு ஒரு பாதுகாப்பான இடமாக ஆக்க உதவும் செயலாக்க மேம்பாடுகள் என இதன் விளைவு இருக்கலாம்.

# குரல் கொடுத்தல்

**கே** **சரியானதாகத் தோன்றாத ஒன்றை நான் வேலையின்போது பார்த்தேன் அல்லது அனுபவித்தேன். ஆனால் யாரிடம் அதை எடுத்துச் செல்வது என்று தெரியவில்லை. தொடர்புகொள்வதற்கான சரியான நபரை நான் அறிந்துகொள்வது எப்படி?**

இது சூழ்நிலையின் தன்மை மற்றும் அவசரத்தைப் பொறுத்தது:

துப்பாக்கியால் சுடுபவர், சட்டவிரோதமாக நுழைபவர் அல்லது குற்றவியல் நடவடிக்கை போன்ற **அவசர நிலைகள் அல்லது பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளூர் சட்ட அமலாக்கம் அல்லது அவசர உதவியை உடனடியாகத் தொடர்புகொள்ளவும்**. உங்கள் முதல் முன்னுரிமை எப்போதும் உங்களையும் உங்களைச் சுற்றியுள்ளோரையும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

வெள்ளம் சூழ்ந்த வாகன நிறுத்துமிடம், உடைந்துபோன பாதுகாப்பு உபகரணம் அல்லது செயலிழந்த நுழைவு அமைப்பு போன்ற **இயக்கரீதியான அல்லது தள அளவிலான பிரச்சினைகளை** உள்ளுக்குள்ளேயே தீர்ப்பதற்குத் தோதாக, **உங்கள் தளத்தின் தலைவர் அல்லது ஆலை மேலாண்மையிடம் சிக்கலைத் தெரிவிக்கவும்**.

**தனிப்பட்ட உறவுகள் அல்லது ஊழியர் உறவுகள் சார்ந்த** விஷயங்களுக்கு, வெளிப்படையான, முதிர்ச்சியடைந்த இருவருக்கு இடையேயான உரையாடலை நாங்கள் ஊக்குவிக்கிறோம். சாத்தியப்படும்போது, மரியாதையான பின்னூட்டத்தை நேரடியாக தனிநபருக்கு வழங்குங்கள் அல்லது அந்தத் தருணத்தில் சிக்கலைத் தீர்க்க உங்கள் மக்கள் தலைவரின் வழிகாட்டுதலை நாடுங்கள். நடத்தை மாறவில்லை அல்லது குறை தொடர்கிறது என்றால், முறையான சேனல்கள் வாயிலாக அதைப் புகாரளியுங்கள்.




நீங்களே சட்டங்களை விளக்கவோ அல்லது சொந்தமாக தீர்ப்புகளை வழங்கவோ ஒருபோதும் எதிர்பார்க்கப்படவில்லை. நாங்கள் என்ன எதிர்பார்க்கிறோம் என்றால், சட்ட ஒழுங்குமுறை அல்லது கொள்கைக்கு உட்பட்டதாக நீங்கள் உணர்ந்த சந்தர்ப்பங்களில் அதை நீங்களே தீர்ப்பதற்குப் பதில் உதவி கேளுங்கள். நன்னெறி இணையவாயில் செல்வதன் மூலம் அல்லது உங்கள் திரையில் ஒரு குறையைப் புகாரளியுங்கள் என்பதை கிளிக் செய்து நீங்கள் தொடங்கலாம்.

ஒரு கவலையை எழுப்புங்கள்

## மேலும் வழிகாட்டுதல்

- எங்கள் நன்னெறி இணையவாயில் வாயிலாக ஒரு குறையைப் புகாரளித்தல்
- உங்கள் குறைகேள் அதிகாரியைக் கண்டறியுங்கள்
- புகார் தொடர்பான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைத் திறங்கள்
- உதவி எண்கள்



# நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல்

நாங்கள் விதிகளை மதிக்கிறோம். எங்கள் தொழில் விவகாரங்களை நெறியோடு நடத்துகிறோம். எனவே எங்களுக்கோ அல்லது எங்கள் நெட்வொர்க்கில் உள்ள யாரொருவருக்குமோ நியாயமற்ற பலன்கள் இல்லை.

தொழிலில் எங்கள் அணுகுமுறையானது உலகளவிலும் உள்ளூர் அளவிலும் ஒவ்வொரு மட்டத்திலும் முற்றிலும் நெறிசார்ந்தது. எங்கள் இயக்கங்களைப் பாதுகாக்கவும் நம் நற்பெயரைத் தாங்கிப் பிடிக்கவும், ஊழல், பாரபட்ச ஆதரவு அல்லது தகாத அனுகூலம் போலத் தோன்றுவதைக்கூட நாங்கள் தவிர்க்கிறோம்.

## நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல்

# நலன் முரண்பாடுகள்

நமது தொழில்முறை பொறுப்புகளிலிருந்து தனிப்பட்ட நலன்களைத் தனியாக வைத்துக்கொள்கிறோம்.

எங்கள் நடத்தையிலும் அதேபோல எங்களது தகவல் தொடர்புகளிலும் வெளிப்படைத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்கிறோம். நிறுவன நலன்களுக்கு முரணான அல்லது நிறுவனத்திற்கு மேலாக தனிப்பட்ட நலன்களை வைப்பதான உணர்வை உருவாக்கும் உட்புற மற்றும் வெளிப்புற நலன்களைத் தவிர்க்கிறோம்.

பணியில் நமது முடிவுகளை பாரபட்சமானதாக்குகிற அல்லது அவ்வாறு கருத வாய்ப்புள்ள GE Vernova க்கு வெளியே வணிக நடவடிக்கைகள் அல்லது இணைப்புகள் அல்லது பிற ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் அல்லது வழங்குநர்களுடன் தனிப்பட்ட உறவுகள் போன்ற தனிப்பட்ட முன்னுரிமைகளினால் ஒரு நலன் முரண்பாடு எழுகிறது. இந்தச் சூழ்நிலைகளை வெளிப்படுத்தும் கடமை நமக்குள்ளது.

ஏற்கெனவே உள்ள மற்றும் சாத்தியமுள்ள முரண்பாடுகளைக் கையாள அவற்றை நலன்முரண்பாட்டுப் படிவத்தை நிரப்புவதன் மூலம் வெளிப்படுத்த வேண்டும். வேலையில் சேரும்போது மட்டுமின்றி, GE Vernova-வில் உங்கள் பணிக்காலம் முழுவதும் இது பொருந்தும். வாய்ப்புள்ள முரண்பாட்டை வெளிப்படுத்துவது ஏதோ தவறு இழைத்துவிட்டோம் என்று அர்த்தமாகாது. அது வெளிப்படைத்தன்மைக்கும் ஏதேனும் அபாயத்தைக் கையாளவும் நமக்கு உதவுகிறது.

### உள்ளபடியான அல்லது சாத்தியமான முரண்பாடுகளில் அடங்குபவை:

- ஒரு நிறுவனத்துடன் GE Vernova மேற்கொள்ளும் வணிகத்தினால் அந்த நிறுவனத்தில் நீங்கள் பலலனடையக்கூடிய நிதிசார் நலனைக் கொண்டிருப்பது
- நெருங்கிய நண்பர்கள் அல்லது குடும்பத்துடன் பணிபுரிவது, வேலைக்கு அமர்த்துவது அல்லது மேற்பார்வையிடுவது
- புறநிலை வேலைவாய்ப்பு (ஊதியத்துடன் அல்லது ஊதியமின்றி)
- புறநிலை இயக்குநர் வாரிய உறுப்பினர்நிலை
- வழங்குநர்களிடமிருந்து பரிசுகள்

### தெரிந்துகொள்வது நல்லது

If you are working on something that relates to or could be perceived to relate to your role at GE Vernova, it is important to disclose the activity to ensure it does not present a conflict. The best course is to consult your People Leader or the Ethics & Compliance team and follow the disclosure process before continuing.

**கே**

**நான் GE Vernova-வில் டிஜிட்டல் எஞ்சினியர். வேலையைத் தாண்டி ஒரு சிறிய தொடக்க நிறுவனத்துக்காக உடற்பயிற்சி கண்காணிப்புச் செயலியொன்றை உருவாக்கி வருகிறேன். இது எரிசக்தியோடு தொடர்பில்லாதது. எனது தனிப்பட்ட நேரத்தில்தான் அதில் வேலை செய்கிறேன். ஆனால் அந்தச் செயலியில் எனது GE Vernova பணியில் நான் பயன்படுத்தும் ஒத்த கட்டுமானமும் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இது ஒரு பிரச்சினையாகுமா?**

இருக்கலாம். தொழிற்துறை வேறாயினும் உங்கள் சொந்த நேரத்திலேயே நீங்கள் வேலை செய்தாலும் ஒன்றின் மேலொன்றாகக் கவியும் திறமைகளும் தொழில்நுட்பமும் நலன் முரண்பாடு அல்லது நிறுவனத்தின் அறிவை, கருவிகளை அல்லது வளங்களை முறையற்றுப் பயன்படுத்துதல் குறித்த கவலைகளை எழுப்பலாம். செயலியைப் பயன்படுத்த ஊழியர்களை அழைப்பதும்கூட உங்கள் நெட்வொர்க்கை முறையற்றுப் பயன்படுத்துவதாகத் தோன்றலாம்.

### மேலும் வழிகாட்டுதல்

- நலன் முரண்பாடுகளுக்கான கொள்கை
- நலன் முரண்பாடுகளை வெளிப்படுத்தல்

## நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல்

# பரிசுகள், பொழுதுபோக்கு, விருந்தோம்பல்

நம்பகமான வணிகக் கூட்டாளிகளாக, நமது வணிக நடைமுறை உபச்சாரங்களை நமது விழுமியங்களுக்கு ஏற்ப சீராக வைத்திருக்கிறோம்.

எரிசக்தித் துறையில் நெருக்கமான வாடிக்கையாளர், வழங்குநர் உறவுகளைப் போஷிப்பது நமது செயல் இலக்கை முடுக்கிவிட உதவுவதுடன் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். சிலநேரங்களில் நாம் பரிசுகள், உணவு அல்லது பொழுதுபோக்கு அனுபவங்களைத் தர, பங்களிக்க அல்லது பெற வேண்டியிருக்கும். இது உறவுகளைப் போஷிக்கவும் உருவாக்கவும் வடிவமைக்கப்பட்ட ஏற்கத்தக்க வணிக நடைமுறைதான். ஆனால் மிக ஆடம்பரமான அல்லது மிகையான எதையும் நாம் தவிர்க்க வேண்டும். ஏனென்றால், அது முறையற்ற அல்லது தகாத செல்வாக்கை ஏற்படுத்துவது போன்ற தோற்றத்தைத் தரக்கூடும்.

வணிக உபச்சாரங்கள் முறையான உறவுகளைக் கட்டமைப்பதை நோக்கமாகக் கொண்டு பயன்படுத்தப்படுகின்றன. அவை முடிவெடுத்தலிலும் செல்வாக்குச் செலுத்தப் பயன்படுத்தும் வாய்ப்புள்ளது. அளிப்பில் உள்ள உண்மைகளின் அடிப்படையில் முடிவுகள் இருக்க வேண்டுமே ஒழிய பரிசுகள் அல்லது பொழுதுபோக்கினால் தூண்டப்பட்டதாக இருக்கக்கூடாது என நம்புகிறோம்.

நாங்கள் ஏற்கிற அல்லது தருகிற எதுவும் பாரபட்சம் அல்லது செல்வாக்கை உருவாக்குவது போன்ற தோற்றத்தை உருவாக்கக் கூடாது. வணிகப் பொழுதுபோக்கு எப்போதுமே பொருத்தமானதாக, தொழில்முறையானதாக இருக்க வேண்டும்.

எந்த வணிக உபச்சாரத்திலும் பங்கேற்பதற்கு அல்லது அளிப்பதற்குமுன், நிறுவன வழிகாட்டுதல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறைத் தரநிலைகளின்படி தேவையான ஒப்புதல்களை நீங்கள் பெற்றுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

தளரா ஊக்கம் சாத்தியமான நலன் முரண்பாடுகளுக்கு எதிராக பாதுகாக்க உதவுகிறது. நெறிசார் மற்றும் இணக்கமான விதத்தில் அனைத்துச் செயல்பாடுகளும் நடத்தப்படுவதை உறுதிசெய்கிறது.



### *தெரிந்துகொள்வது நல்லது*

ஒரு பரிசு எவ்வாறு கருதப்படக்கூடும் என்பதை எப்போதும் பரிசீலியுங்கள் - வணிகம் முடிக்கப்பட்ட பிறகு கூட - வெளிப்படைத்தன்மைக்கும் நன்னெறிக்கும் முன்னுரிமை அளியுங்கள்.

## நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல்

# பரிசுகள், பொழுதுபோக்கு & விருந்தோம்பல் கொள்கை

**கே** **நமது வழங்குநர்களில் ஒருவருடன் ஓர் ஒப்பந்தப் பேச்சுவார்த்தை இப்போதுதான் முடிந்தது. ஓர் இசைக்கச்சேரிக்கு முன்வரிசைக்கான டிக்கெட்டுகளைத் தந்து தங்கள் நன்றியை எனக்குத் தெரிவிக்க விரும்புகிறார்கள். பேச்சுவார்த்தை முடிந்துவிட்டது என்பதனால், அதை ஏற்றுக் கொள்ளலாமா?**

இல்லை. ஒப்பந்தம் முடிவடைந்துவிட்டாலும்கூட, வழங்குநர்களிடமிருந்து விலை அதிகமுள்ள பரிசுகளை ஏற்பது பாரபட்சமானதாக அல்லது தகாத செல்வாக்கை உருவாக்கக்கூடியதாக, நிறுவனக் கொள்கையை மீறுவதாகக் கருதப்படலாம். பரிசுகள் எளிமையாக, எப்போதாவது தரக்கூடியதாக, நன்னம்பிக்கையையும் தொழில் நாகரீகத்தையும் பேணுவதற்கு ஏற்றதாகவும் இருக்கவேண்டும். சந்தேகம் எழும்போது, மிகையானதாகப் பார்க்கப்படக்கூடிய எந்தப் பரிசுகளையும் ஏற்கும் முன்பாக உங்கள் மக்கள் தலைவர் அல்லது நெறிகள் & இணக்கக் குழுவை ஆலோசிக்கவும்.

### நடைமுறையில்

- ✓ பயிற்சிக்கான, தயாரிப்பு செயல்விளக்கம் அல்லது ஊக்க நடவடிக்கைகளுக்கான ஒரு வருகையோடு தொடர்புடைய நியாயமான செலவுகள்
- ✓ எளிமையான அல்லது சம்பிரதாய மதிய உணவுகள்
- ✓ GE Vernova பிராண்டின் ஊக்கச்சலுகைப் பொருட்கள்
- ✓ பெயரளவு மதிப்புடைய பரிசுகளைப் பெறுதல்
- X பரிசு அட்டைகள் போன்ற ரொக்க அல்லது ரொக்க மதிப்புடையவை
- X ஒரே நிறுவனத்திடமிருந்து அடிக்கடி பரிசுகள் வாங்குவது அல்லது கொடுப்பது
- X உள்நாட்டு வழக்கமாகவே இருந்தாலும்கூட, நமது நற்பெயருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய வயதுவந்தோர் பொழுதுபோக்கு அல்லது வேறு பிற பொழுதுபோக்கு அல்லது நிகழ்ச்சி

### மேலும் வழிகாட்டுதல்

- **பரிசுகள், பொழுதுபோக்கு & விருந்தோம்பல் கொள்கை**
- **தொழில் உபச்சாரக் கொள்கை**
- **நலன் முரண்பாடுகளை வெளிப்படுத்தல்**

## நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல்

# இலஞ்ச எதிர்ப்பு

நமது நெறிசார் கலாச்சாரத்தில் இலஞ்சங்களுக்கு இடமில்லை.

நெறிசார் தொழில் நடைமுறைகளை நாம் எப்போதும் விதிவிலக்கின்றி பேணுகிறோம். இலஞ்ச ஊழல்கள் சட்டத்தை, நமது கொள்கைகளை, நமது விழுமியங்களை மீறுபவை. ஒரு வணிகத்தைப் பெறுவதற்காக, தக்கவைத்துக் கொள்வதற்காக அல்லது நியாயமற்ற பலனைப் பெறுவதற்காக நாம் ஒருபோதும் மதிப்புள்ள எதையும் வழ எந்த வடிவிலும் ங்கவோ அல்லது ஏற்பதோ இல்லை.

எந்த வடிவிலும் இலஞ்ச நடவடிக்கைகளை நாம் சகித்துக் கொள்வதில்லை, அதில் ஈடுபட்டிருப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி அல்லது அந்த உறவின் முக்கியத்துவம் என்னவாக இருந்தாலும் சரி. எங்கள் வெற்றியானது நாங்கள் வழங்கும் எங்கள் தயாரிப்பு மற்றும் சேவையின் தரத்தை அடிப்படையாகக் கொண்டது - நெறியற்ற அல்லது சட்டவிரோத நடத்தினால் அல்ல. இலஞ்சங்களில் பரிசுகள், பேமெண்டுகள், பொழுதுபோக்கு, பயணம் அல்லது எதுவுமே பதிலுக்குத் தரப்பட்டிராவிட்டாலும்கூட ஏதேனும் மதிப்புடையவை, வணிகத்தில் முறையற்ற உதவி அல்லது பிரதிபலன் எதிர்பார்த்துப் பரிமாறுபவை போன்றவை அடங்கும். உலகெங்கிலும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள GE Vernova-வின் அரசு மற்றும் தனியார் துறையுடனான அனைத்து வணிக விவகாரங்களிலும் இலஞ்சம் தடைசெய்யப்பட்டுள்ளது.

**கே** **ஓர் அனுமதி பெறும் செயல்முறையின்போது, ஓர் அரசு அதிகாரி உள்ளூர் ஏஜெண்டிடம் “சிறிய போனஸ்” தருவது நமது அனுமதிக்கான ஒப்புதல் செயல்முறையை விரைவுபடுத்த உதவும் என்ற குறிப்பைத் தருகிறார். அந்தத் தொகை வழக்கமான உள்நாட்டு நடைமுறையாக, நமது போட்டியாளர்கள் அத்தகு சிறு தொகைகளை கடந்த காலத்தில் தந்திருப்பதான வதந்தியும் உள்ளது. இதைச் செய்வது ஏற்கக்கூடியதா?**

இல்லை. ஒரு முடிவில் செல்வாக்கு செலுத்துவதற்காகச் செய்யும் எந்தச் செலுத்துகையும் - அது நேரடியாகவோ அல்லது ஒரு ஏஜெண்ட் மூலம் மறைமுகமாகவோ இருந்தாலும்கூட - அது இலஞ்சமாகக் கருதப்படும். இது தடைசெய்யப்பட்டுள்ளது. உரிமங்கள் மற்றும் அனுமதி பெறுவதைப் பொறுத்தவரை அத்தகு நடைமுறைகள் உள்நாட்டில் இயல்பானதாக இருப்பினும், நாம் இயங்கும் எல்லா இடங்களிலும் நெறிசார் தரநிலைகளைப் பின்பற்ற வேண்டும். இந்தச் செலுத்துகைகளில் ஈடுபடுவது அல்லது வசதி ஏற்படுத்துவது தீவிரமான சட்டப் பிரச்சினைகளுக்கான அபாயத்தை ஏற்படும். இந்தச் சூழ்நிலைகளை நெறிகள் & இணக்கக் குழு அல்லது சட்டத்துறையுடன் உடனடியாகத் தெரிவிக்கவும்.



### மேலும் வழிகாட்டுதல்

→ இலஞ்ச எதிர்ப்புக் கொள்கை
→ தொழில் உபச்சாரக் கொள்கை

## நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல்

# நியாயமான போட்டி

போட்டியில் வெல்வதற்காக நாம் மோசடி செய்வதில்லை. நாம் நியாயமாக வெல்கிறோம்.


ஒரு போட்டி நிறைந்த சந்தையிடத்தில், வெற்றிகரமான முன்னோடியாக இருப்பதன் அர்த்தம் விதிப்படி நடந்து வெல்வதாகும். விலை நிர்ணயம் அல்லது வாடிக்கையாளர்கள் அல்லது போட்டியாளர்களுடன் முறைசாரா ஏற்பாடுகளில் ஈடுபடுவது போன்ற இரகசியத் தகவல்களை வைத்திருந்து அல்லது பகிர்ந்து GE Vernova-வுக்காக அநியாயமான பலனைப் பெறுவது மோசடியாகும்.

எந்த வடிவிலான நியாயமற்ற அல்லது ஏமாற்று நடத்தைகளையும் தவிர்த்து போட்டி சட்டங்களுக்கு நமது ஊழியர்கள் இணங்கி நடக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம். நியாயமான நெறிசார் வணிக நடைமுறைகளைப் பேணிக்காக்க போட்டி சட்டங்களுக்கு இணங்குவது அத்தியாவசியமானது. நமது போட்டியாளர்களின் உரிமைகளை நாம் மதிக்கிறோம். அவர்களது தயாரிப்புகள் அல்லது சேவைகள் அல்லது நம்முடையவை குறித்து தவறான கூற்றுகளை நாம் வெளியிடுவதில்லை.

விலை நிர்ணயம், சந்தை ஒதுக்கீடு அல்லது கேட்பில் ஏற்ற இறக்கம் போன்ற சட்டத்துக்குப் புறம்பாக போட்டியைத் தடுக்கும் ஏதேனும் ஒப்பந்தங்கள் அல்லது நடத்தையை ஊழியர்கள் தவிர்க்க வேண்டும். விலை நிர்ணய உத்திகள், உற்பத்தித் திறன்கள் அல்லது சந்தைப்படுத்தும் திட்டங்கள் உள்ளிட்ட முக்கியமான போட்டி தகவல்களைப் போட்டியாளர்களுடன் விவாதிப்பதிலிருந்தும் ஊழியர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். நிறுவனம் இயங்கும் அனைத்து நாடுகளிலும் நீங்கள் சம்பந்தப்பட்ட போட்டி சட்டங்களைக் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்த அதைப் புரிந்துகொண்டு நடவடிக்கைகள் எடுப்பது முக்கியம்.

நாம் சட்டப்பூர்வ மற்றும் நேர்மையான வழிகளில் மட்டுமே போட்டி குறித்த அறிவினைப் பெறுகிறோம். முந்தைய தொழில் உரிமையாளரிடமிருந்து இரகசியத் தகவல்களைப் பகிரும்படி நாம் ஊழியர்களிடம் கேட்பதில்லை. எந்த ஏமாற்று அல்லது தவறாக வழிநடத்தும் நடைமுறைகளுக்கும் அல்லது ஏற்கத்தகதா வளங்கள் எதையும் பயன்படுத்துவதற்கும் நாம் இடம்தர மாட்டோம். இதில் GE Vernova அல்லது பெறுநருக்கானது அல்லாத இரகசிய ஆவணங்கள் அல்லது தகவல் தொடர்புகள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

தரமான தயாரிப்புகளை அளிப்பதன் மூலம் சந்தையையும் பிராண்டு மீதான பற்றையும் நாம் உருவாக்குகிறோமே தவிர நியாயமற்ற அல்லது போட்டி நடைமுறைகளுக்கு எதிரான செயல்களில் ஈடுபடுவதன் மூலம் அல்ல.



**கே** **நான் ஒரு வாடிக்கையாளருடன் பேசிக் கொண்டிருக்கிறேன். அவர் ஒரு போட்டியாளரின் விலைக்குறிப்பை எனக்குக் காட்ட வருகிறார். நான் என்ன செய்ய வேண்டும்?**

பணிவுடன் நிராகரிக்கவும். இரகசியம் என அடையாளப்படுத்திய ஆவணங்களை அல்லது இரகசியமென்று நீங்கள் கருதுபவற்றை ஒருபோதும் ஏற்காதீர்கள். உங்களுக்கு இரகசியத் தகவல்கள் அனுப்பப்பட்டால், உதாரணமாக ஒரு மின்னஞ்சலில் வந்திருந்தால், அதைப் பகிராதீர்கள். தாமதமின்றி சட்டம் அல்லது நெறிகள் & இணக்கக் குழுவைத் தொடர்புகொள்ளுங்கள் - இதைச் சுற்றிலும் நேரம் சார் தெரிவித்தல் தேவைகள் இருக்கலாம்.

### மேலும் வழிகாட்டுதல்

→ நியாயமான போட்டிக் கொள்கை

## நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல்

# சர்வதேச வர்த்தகம்

அனைத்து ஏற்றுமதி கட்டுப்பாடு, பொருளாதாரத் தடைகள் மற்றும் சுங்கச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் நாங்கள் இணங்குகிறோம்.

100க்கும் மேற்பட்ட நாடுகளில் நாங்கள் வணிகம் செய்கிறோம். எனவே, உலகெங்கிலும் நமது தயாரிப்புகளையும் சேவைகளையும் வடிவமைப்பதை, உருவாக்குவதை, அனுப்புவதை உறுதிசெய்ய நாங்கள் உலகெங்கிலும் உள்ள ஏற்றுமதி இறக்குமதிச் சட்டங்களுடன் இணங்குவதில் கவனமாக உள்ளோம். இதில் சுங்க ஒழுங்குமுறைகள், ஏற்றுமதி இறக்குமதி நடைமுறைகள், உலகளாவிய ஏற்றுமதி கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு இணங்குவது அடங்கும். ஒரு அமெரிக்க நிறுவனமாக நாம் அமெரிக்க அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத எந்தப் புறக்கணிப்புக்குமோ அல்லது பிற வர்த்தகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்குமோ ஒத்துழைக்க இயலாது.

அங்கீகரிக்கப்பட்ட சேனல்களைப் பயன்படுத்தி, சரியான வகைப்பாடுகளைப் பிரயோகித்து, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடமும் வழக்கமான உரிய ஆய்வினை மேற்கொள்வது ஆகியவற்றின் மூலம் பரிவர்த்தனைகள் துல்லியமாக, வெளிப்படைத்தன்மையுடன் சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கு இணங்கியதாக இருப்பதை உறுதிசெய்வதற்கு நாம் பொறுப்பாகிறோம். நாம் இயங்கும் அனைத்து நாடுகளிலும் தடைகளுக்கு இணங்குகிறோம். எந்தப் பரிவர்த்தனையிலும் நாம் ஈடுபடும் முன்பாக இதைப் பொறுப்புடன் செய்கிறோம். நம் ஊழியர்கள் அனைவரும் நமது தயாரிப்புகள், சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்களை எல்லைகள் கடந்து கொண்டு செல்வதற்குத் தேவையானவை பற்றித் தெரிந்துகொள்ளவும், புரிந்துகொள்ளவும் இணங்குவதையும் எதிர்பார்க்கிறோம்.

### நடைமுறையில்

- பரிவர்த்தனைக்கான அனைத்துத் தரப்பினரும் தடைசெய்யப்பட்டிருக்காததையும் தடைவிதிக்கப்பட்ட நாட்டுக்கு சரக்கு அனுப்பப்படாமல் இருப்பதையும் உறுதிசெய்யவும்
- உங்கள் வணிக சுங்கக் குழுக்களிடம் முறையாக வகைப்படுத்தப்பட்ட சரக்குகள் உள்ளிட்ட இறக்குமதி பரிவர்த்தனைகளுக்கான துல்லியமான, முழுமையான தகவல்களை சரியான நேரத்தில் வழங்குங்கள்
- ஏற்றுமதி இறக்குமதியைச் சுற்றிலுமுள்ள அனைத்து வணிக நடைமுறைகளையும் அறிந்து, புரிந்து, பின்பற்றுங்கள். GE Vernova அங்கீகரித்த சுங்க முகவர்களை மட்டுமே பயன்படுத்துங்கள்
- சிறப்புத்திட்டத் தேவைகளுடன் இணங்குவதை உறுதிசெய்ய, குறைக்கப்பட்ட வரிவிகிதங்களைக் கோருவதற்கு முன் சர்வதேச வர்த்தகக் கட்டுப்பாடுகளுக்கான (ITC) அணியை ஆலோசிக்கவும்

### இறக்குமதி என்றால் என்ன?

ஒரு பௌதீகமான உருப்படி ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குள் வரும் நகர்வு. இறக்குமதி மற்றும் சுங்கத் தேவைகள் பொதுவாக இயற்பொருட்களை மட்டுமே கவனத்தில் கொள்கின்றன.

### ஏற்றுமதி என்றால் என்ன?

ஒரு பௌதீக உருப்படி, மென்பொருள் அல்லது தொழில்நுட்பத் தரவு மற்றும் தொழில்நுட்பம் (வழிவகை அறிவு உட்பட) போன்றவையும் பௌதீக உருப்படிகளுடன் கூடவே - மின்னஞ்சல்கள், கோப்புப் பரிமாற்றங்கள், மூல நிரல்வரி தொகுப்பாக்கம், ஏன் வாய்மொழி கலந்துரையாடல்கள்கூட - ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு அனுப்புதல். சில அதிகார வரம்புகளில், இந்த நகர்வானது பௌதீகமாக ஒரே நாட்டுக்குள் வெவ்வேறு தேசத்தவருக்கிடையே (அதாவது ஒரு அமெரிக்க தேசத்தைச் சேர்ந்த ஊழியர் தொழில்நுட்ப ஆவணங்களை ஒரு ஐக்கிய ராஜ்ஜியத்தைச் சேர்ந்த ஊழியருடன் பகிர்வதும் அதைப் பகிரும் நேரத்தில் அவர் அமெரிக்காவில் இருப்பதும்) இருக்கலாம்.

### தடைகள் என்றால் என்ன?

குறிப்பிட்ட நாடுகள், அமைப்புகள் அல்லது நபர்களுடன் வர்த்தகம் மற்றும் நிதிசார் பரிவர்த்தனைகளைக் கட்டுப்படுத்த அல்லது தடைசெய்ய அரசாங்கங்கள் அல்லது சர்வதேச அமைப்புகளால் விதிக்கப்படும் சட்ட மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள்.

## நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல்

# சர்வதேச வர்த்தகம்



**கே** **ஒரு நீண்டகால வழங்குநர் தான் ஒரு புதிய கூட்டாளி நிறுவனத்தை சமீபத்தில் வாங்கியதாக என்னிடம் தெரிவித்தார். இந்தக் கூட்டாளியுடன் எனக்குப் பரிட்சயமில்லை. ஆனால் சமீபத்திய ஆய்விலிருந்து அவர்கள் அரசாங்கக் கண்காணிப்புப் பட்டியலில் இருப்பதைத் தெரிந்துகொண்டேன். நான் அவர்களுடன் பணிபுரிவதைத் தொடரலாமா?**

இல்லை - அதை இடைநிறுத்திவிட்டு மேற்கொண்டு தொடராமல் இருப்பது முக்கியம். அவர்கள் மறைமுகமாக ஒரு கூட்டாளியின் மூலமாக தொடர்புடையவராக இருந்தாலும், தடைசெய்யப்பட்ட அமைப்புகளுடன் ஈடுபடுவது நிறுவனத்தைக் கடுமையான சட்ட மற்றும் ஒழுங்குமுறை அபாயங்களுக்கு உட்படுத்தலாம். உங்கள் மக்கள் தலைவரிடம் நீங்கள் உடனடியாகத் தெரிவிப்பதும் நெறிகள் & இணக்கக் குழு அல்லது ITC குழுக்களிடம் சூழலை ஆய்வுசெய்து முறையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்கவும் வேண்டும். விழிப்புடன் இருப்பது நமது வணிகத்தைக் காக்கவும் சர்வதேச வர்த்தகச் சட்டங்களுக்கு இணங்குவதையும் உறுதிசெய்யும்.

### மேலும் வழிகாட்டுதல்

→ சர்வதேச வர்த்தக இணக்கக் கொள்கை
→ ITC இணைய வாயில்

## நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல்

# வழங்குநர் ஈடுபாடு

உலகெங்கிலுமுள்ள வழங்குநர்களுடன் நம்மைப் போலவே அவர்களும் அதே நெறிசார் தரநிலைகளின்படி ஒழுகுவதை உறுதிப்படுத்த நாம் நெருக்கமாகப் பணிபுரிகிறோம்.

நமது வழங்குநர்கள் விற்பனையாளர்களுக்கும் மேலானவர்கள் - உலகுக்கு பாதுகாப்பான, புதுமையான, நீடித்த தீர்வுகளை வழங்குவதில் அவர்கள் நம் கூட்டாளிகள். அதனால்தான் நமது ஒட்டுமொத்த உலகளாவிய வழங்கல் சங்கிலியும் நெறிகள், நாணயம், இணக்கம் ஆகியவற்றுக்கான நமது உறுதிப்பாட்டைப் பகிர்ந்துகொள்வதை எதிர்பார்க்கிறோம்.

வழங்குநர்கள் மீதான நம் எதிர்பார்ப்புகளில் அடிப்படை மனித உரிமைகளுக்கான மரியாதை, ஊழியர்களை நியாயமாக நடத்துதல், பத்திரமானதும் ஆரோக்கியமானதுமான பணிச் சூழல்கள், வேலையைப் பெறுவதற்கு நியாயமான நடைமுறைகளைப் பின்பற்றுதல் ஆகியவை அடங்கும்.

நமது வளமளிப்புக் குழு, முறையான ஆய்வு, தொடர் கண்காணிப்பு மற்றும் நமது வழங்குநர் நாணயத்துக்கான வழிகாட்டி வாயிலாக அவர்கள் நம் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதை உறுதிசெய்கிறது. ஆனால் வழங்கல் சங்கிலியில் நாணயம் என்பது ஒவ்வொருவரின் பொறுப்பாகும். வளமளிப்புக்கு வெளியிலுள்ள ஊழியர்களுக்கு ஏதாவதொன்று சரியாக இல்லாதபோது அந்தக் குறைகளைக் கண்டறிந்து மேலெடுத்துச் செல்லும் பொறுப்பு உள்ளது.

நாணயத்துக்கான நமது உறுதிப்பாட்டைக் கொண்டிருக்கக்கூடிய, எதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்தச் சரக்குகளையும் சேவைகளையும் வழங்கும் தகுதிபெற்ற, அனைத்துப் பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் GE Vernova கொள்கைகளுடன் இணங்குகிற வழங்குநர்களை மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம்.

### நடைமுறையில்

- பாதுகாப்பற்ற பணிச் சூழல்கள், சுற்றுச்சூழல் தீங்குகள் அல்லது வழங்குநர் தளங்களில் மனித உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தும் அறிகுறிகள் போன்ற அபாயச் சங்குகளின் வாய்ப்புகள் குறித்து விழிப்புடன் இருங்கள்
- முறையான இரகசியத்தன்மை ஒப்பந்தம் இல்லாவிட்டால், ஒருபோதும் இரகசியத் தகவல்கள் அல்லது தனிப்பட்ட தரவுகளை வழங்குநர்களுடன் பகிராதீர்கள்
- அனைத்து வழங்குநர் தொடர்பான கேள்விகள், குறைகள் அல்லது நடவடிக்கைகளை பொருத்தமான வளமளிப்புத் தொடர்பு நபருக்கு அனுப்பி நமது வளமளிப்பு மற்றும் கொள்முதல் கொள்கைகளைப் பின்பற்றுங்கள்



### மேலும் வழிகாட்டுதல்

- வழங்குநர் உறவுகள் கொள்கை
- வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் & ஆலோசகர்களுக்கான GE Vernova நன்னெறி வழிகாட்டி: GE Vernova வழங்குநருக்கான நடத்தை விதிகள்
- மரியாதைக்குரிய பணியிடக் கொள்கை
- மனித உரிமைகள் கொள்கை

## நேர்மையாகவும் நியாயமாகவும் தொழில் செய்தல்

# அரசு அமைப்புகளுடன் தொடர்பாடல்கள்

அரசு அமைப்புகளுடன் வணிகம் செய்யும்போது விதிவிலக்கின்றி, உலகளாவிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடனும் அதுபோலவே நிறுவனக் கொள்கைகளுடனும் இணங்குகிறோம்.

நமது செயல் இலக்கில் செழிப்படையவும் கரியமில வாயுவைக் குறைக்கவும் செய்வதற்காக மின்மயமாவதற்கு, GE Vernova அமெரிக்காவிலும் உலகெங்கிலும் உள்ள அரசு அமைப்புகளுடன் ஈடுபடுகின்றது. இந்த மிக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சூழலில் நமது ஈடுபாட்டுக்கான ஒரு நெறிசார்ந்த வெளிப்படையான அணுகுமுறையைப் பேணுவது முக்கியமானது. வெவ்வேறு நாடுகளும் பிராந்தியங்களும் குறிப்பிட்ட கொள்முதல் சட்டங்களைக் கொண்டுள்ளன. எனவே, நாம் புரிந்துகொள்வதிலும் இணங்குவதிலும் குறிப்பாகக் கவனத்துடன் செயல்பட வேண்டியுள்ளது.

முதலில் சட்டத்துடன் கூட்டாளியான பின்பே நாம் அரசு வணிகத்தை நாடுகிறோம். அரசு அல்லது அரசு தொடர்புடைய அமைப்புடன் நேரடியாக அல்லது மறைமுக ஒப்பந்தத்தில் இருந்தாலும் நாம் கடுமையான ஆய்வு விதிகளையும் பின்பற்றுகிறோம்.

அரசாங்கங்களுடன் செயல்படும்போது அனைத்து ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடனும் GE Vernova உடன் பொருந்தக்கூடிய ஒழுங்குமுறைகளுடனும் இணங்க நாம் உறுதி கொண்டுள்ளோம். அனைத்து அரசுகள் அல்லது அரசு தொடர்புடைய அமைப்புகளுடன் வர்த்தக உறவின்போது நாம் உண்மையாகவும் துல்லியமாகவும் தொடர்ந்து நடந்துகொள்கிறோம். அரசு தொழில் நடவடிக்கைகளில் நமது தொடர் இணக்கத்தை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டு அதில் கவனம் செலுத்தும் கட்டுப்பாடுகளையும் நடைமுறைகளையும் பேணுகிறோம்.

**கே**

**முந்தைய வேலையில் நான் சந்தித்த ஒரு அமெரிக்க அரசுப் பொறியாளர் வரவிருக்கும் செயல்திட்டத்தில் அரசாங்கம் பயன்படுத்தும் சிறப்பு அளவீடு குறித்து எனக்குக் கூறியிருந்தார். ஒப்பந்தத்தில் நாம் நியாயமான வாய்ப்பைப் பெற அவர் விரும்புகிறார். இந்த ஆஃபரை நான் ஏற்கலாமா?**


இந்த விளக்கத்தைத் தருவதற்கு ஒப்பந்த அதிகாரியின் அங்கீகாரத்தை அவர் வெளிப்படையாகப் பெற்றிருப்பதைக் கண்டுபிடிக்காமல் அதைச் செய்யக்கூடாது. அவர் அவ்வாறு பெற்றிருந்தால், ஈடுபடும் முன்பாக உரையாடலின் எழுத்துப்பூர்வப் பதிவை நீங்கள் உருவாக்கி சட்டத்துறையுடன் கூட்டிணையவும்

### *அரசாங்க அமைப்பு என்றால் என்ன?*

எந்தவொரு மத்திய, மாநில அல்லது உள்ளூராட்சியும் அதேபோல அதன் எந்தவொரு துறை, முகமை அல்லது அதன் சார்பு நிறுவனம் அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனம் (மாநிலத்துக்குச் சொந்தமான அல்லது மாநிலக் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனம் போன்றவை) ஆகியவை அரசு அமைப்பில் அடங்கும். இதில் ஐக்கிய நாடுகள் மற்றும் உலக வங்கி போன்ற பொதுச் சர்வதேச அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் அடங்கும். பொதுச் சேவைகளை (மின்சாரம் போன்றவை) வழங்கும் தனியார் நிறுவனங்களும் பொதுக் கொள்முதல் விதிகளுக்கு உட்பட்டவையாக இருக்கலாம். நமக்கு, நமது வாடிக்கையாளர்களுக்கு அல்லது வழங்குநர்களுக்குப் பொருந்தும் எந்தவொரு பொது கொள்முதல் ஒழுங்குமுறைகளுடனும் நாம் இணங்கிச் செல்கிறோம்.

### மேலும் வழிகாட்டுதல்

→ அரசாங்கங்களின் கொள்கையுடன் செயல்படுதல்



# பொறுப்பேற்கச் செய்தல்

நமது பணியிடத்தை பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

நமது மக்களை, நமது சுற்றுச்சூழலை, நாம் இயங்கிவரும் நமது சமூகங்களையும் அதேபோல நமது இயக்கங்கள் மற்றும் தரவுகளையும் பத்திரமாக வைத்திருக்க நாம் ஒன்றிணைந்து கடுமையாகப் பாடுபடுகிறோம். அது பத்திரமாக இருக்கும்போதே நாம் வேலையைத் தொடங்குகிறோம். அது பத்திரமில்லாதபோது நாம் வேலையை நிறுத்துகின்றோம்.

## பொறுப்பேற்கச் செய்தல்

# நிலைத்தன்மை

உலகிற்கு மின்சாரம் அளித்து வளம் பெறச் செய்வதும், கரியமில உமிழ்வைக் குறைப்பதுமான நமது நோக்கம், முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது மிக முக்கியமானதாக உள்ளது. பொருளாதாரங்களுக்கு ஆற்றலை அளிக்கக்கூடிய, சமுகங்களை ஆதரிக்கிற மேலும் நீடித்த மின் சக்தி அமைப்பை உருவாக்க நாம் உதவி வருகிறோம். சுகாதாரம், பாதுகாப்பு, தரமான வாழ்க்கைக்கு முக்கியமான மின்சாரத்தை வழங்குகிறோம்.

சுகாதாரம், பாதுகாப்பு, தரமான வாழ்க்கைக்கு முக்கியமான மின்சாரத்தை வழங்குகிறோம். நமது செயல்பாடுகளின் ஆணிவேராக நிலைத்தன்மை உள்ளது. நமது நிலைத்தன்மை சட்டகத்தின் வழிகாட்டுதலுடன் மின்சக்தி வழங்குதல், கரியமில வாயுக் குறைப்பு, பேணிப் பாதுகாத்தல், செழித்தல் ஆகிய நான்கு தூண்களின் மீது கட்டமைக்கப்பட்டுள்ள நம் நிறுவனம் சுத்தமான மேலும் தாங்குதிறன் கொண்ட வருங்கால எரிசக்தியை நோக்கி முன்னேறிச் செல்கிறோம். ஒவ்வொரு தூணும் ஓர் உறுதிப்பாட்டைக் குறிக்கிறது: நீடித்த மின்சாரத்துக்கான அணுகலை விரிவுபடுத்தல், கரியமில வாயு உமிழ்வுகளைக் குறைத்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பான, நியாயமான, பொறுப்பான பணியிடங்கள் மற்றும் சமூகங்களைப் பேணி வளர்த்தல்.

இந்த முயற்சிகளின் வாயிலாக நாங்கள் எவ்வாறு புதுமை படைக்கிறோம், இயங்குகிறோம், நமது வாடிக்கையாளர்களுக்குச் சேவை புரிகிறோம் என்பதில் நிலைத்தன்மையை ஒருங்கிணைக்கிறோம். இவ்வாறுதான் நாம் நமது நோக்கங்களை நிறைவுசெய்து மக்களுக்கும், இந்த பூமிக்கும் வரவிருக்கும் தலைமுறைகளுக்கும் நீடித்த பயனை ஏற்படுத்துகிறோம்.



### மேலும் வழிகாட்டுதல்

- நிலைத்தன்மைக் கொள்கை
- நிலைத்தன்மை இணையதளம்

## பொறுப்பேற்கச் செய்தல்

# மனித உரிமைகள்

நாம் பணிபுரியும் எல்லா இடங்களிலும் மனித உரிமைகளுக்கான தரநிலைகளை நிலைநிறுத்துவதில் விழிப்புடன் இருக்கிறோம்.


வளர்ந்த, வளரும் மற்றும் புதிய பொருளாதாரங்கள் எங்கிலும் உலகின் மின்சாரத்தை உருவாக்க GE Vernova உதவுகிறது. எனவே நமது வணிகத்திலும் மதிப்புச் சங்கிலியிலும் உள்ள ஒவ்வொருவரும் நியாயமாகவும் கண்ணியத்துடன் நடத்தப்படுவதை நாம் உறுதிசெய்ய வேண்டும்.

ஒழுக்கமும் பாதுகாப்பும் கொண்ட பணிச்சூழல்களை, சங்கம் அமைக்கும் சுதந்திரத்தை, வலிந்து வேலை செய்ய வைப்பதோ அல்லது குழந்தைத் தொழிலாளர்களோ இல்லாமல் இருப்பதை, அதேபோல சமூகப் பாதுகாப்பினை, கண்ணியத்தை, பாதுகாப்பை, நமது நிறுவனத்துக்குள்ளும் நமது வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள், வணிகக் கூட்டாளர்களுக்கிடையிலும் சுற்றுச்சூழல் பராமரிப்பை வழங்குவது போன்றவற்றை மதித்து நடக்கவும் நாம் உறுதிபூண்டுள்ளோம்.

இந்த உறுதிப்பாடுகளை மீறக்கூடிய எதையேனும் நாம் எதிர்கொண்டால், அதை மக்கள் தலைவரிடம் அல்லது திறந்த புகாரளிப்பு சேனல் மூலம் புகாரளிக்க வேண்டும்.

### கவனிக்க வேண்டிய விஷயங்கள்:

- 16 வயதுக்குக் கீழ் அல்லது உள்நாட்டு சட்டப்பூர்வ பணிபுரியும் வயதுக்குக் கீழ் உள்ளவர்களாகத் தோன்றும் பணியாளர்கள், இதில் எது அதிகம் உள்ளதோ அது
- பாதுகாப்பற்ற பணிச்சூழல்கள் அல்லது துப்புரவற்ற வாழ்க்கைச் சூழல்கள்
- பணியாளர்களுடன் நீங்கள் ஈடுபடுவதை அனுமதிக்க மறுக்கும் மக்கள் தலைவர்கள்
- பணியிட துன்புறுத்தல், வம்பிழுத்தல், பாகுபாடு அல்லது வன்முறைக்கான அறிகுறிகள்
- வேலைகளுக்கு பணியமர்த்தல் கட்டணங்கள், முறையாகச் சம்பளம் தராமை அல்லது போதிய ஓய்வு இடைவேளை அளிக்காமை அல்லது வலிந்து வேலை செய்ய வைப்பது, உ.ம். கடவுச்சீட்டை பிடித்து வைத்துக்கொண்டு அவ்வாறு செய்வது, போன்ற நியாயமற்ற அல்லது சட்டவிரோத செயல்பாடுகள் குறித்த வதந்திகள்



### மேலும் வழிகாட்டுதல்

- **மனித உரிமைகள் கொள்கை**
- **வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் & ஆலோசகர்களுக்கான GE Vernova நன்னெறி வழிகாட்டி: GE Vernova வழங்குநருக்கான நடத்தை விதிகள்**

பொறுப்பேற்கச் செய்தல்

# சுற்றுச்சூழல், சுகாதாரம், பாதுகாப்பு

ஒவ்வொரு நாளும் நாம் பணிபுரியும் எல்லா இடங்களிலும் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் முதலில் வைப்பது நாம் வெல்ல உதவுகிறது.

நமது சுற்றுச்சூழல், சுகாதாரம், பாதுகாப்பு (EHS) கொள்கைகள் ஒவ்வொருவரும் பத்திரமாக, நன்றாக இருப்பதற்காகவும் நமக்காக அல்லது நம் சார்பில் பணிபுரியும் ஒவ்வொருவரும் நாளின் முடிவில் வீட்டுக்குப் பத்திரமாகத் திரும்பிச் செல்வதை உறுதிசெய்யவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நமது இயக்கங்களுக்குப் பொருந்தும் அனைத்து EHS சட்டங்களுடனும் நாம் இணங்குகிறோம். காயங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க ஒவ்வொருவரும் பின்பற்றுவதற்கான பாதுகாப்பான பணி நடைமுறைகளை நாம் உருவாக்குகிறோம். ஒரு புதிய செயல்பாட்டை நாம் திட்டமிடும்போது, அது ஒரு புதிய தயாரிப்பை வடிவமைப்பதாக இருந்தாலும், புதிய சந்தையில் நுழைவதாக இருந்தாலும், புதிய கட்டிடத்தைக் கட்டுவதாக இருந்தாலும், நமது இருக்கக்கூடிய உற்பத்தி வரிசைகளில் வீணாதலைத் தடுத்தல் கொள்கைகளைப் பிரயோகிப்பதாக இருந்தாலும் அல்லது புதிய தொழிலை கையகப்படுத்துவதாயினும் EHS அபாயங்களை நாம் மதிப்பிட்டுக் கையாள்கிறோம்.


### கீழ்க்கண்டவற்றின் மூலம் ஒவ்வொருவரையும் பத்திரமாக வைத்திருப்பதில் நாம் பங்கு வகிக்கின்றோம்:

- உயிர் காக்கும் விதிகளைப் பின்பற்றுதல்
- சரியான நேரத்தில் அனைத்து EHS பயிற்சி அமர்வுகளையும் நிறைவுசெய்தல்
- தளங்களில் EHS குறைபாடுகளைக் கண்டறிய நமது செயல்முறைகளைப் பின்பற்றுதல்
- பாதுகாப்பற்றதாகத் தோன்றுகிற அல்லது உங்களுக்கு உறுதியாகத் தெரியாத தளத்துக்கு வெளியில் உள்ள வேலைகள் உள்ளிட்ட வேலைகளை நிறுத்துதல்

### நடைமுறையில்

புகாரளிக்க வேண்டிய EHS அபாயச் சங்குகளுக்கான உதாரணங்கள்:

- பாதுகாப்பு குறைபாடுகள் அல்லது அவசரகாலத் தயார்நிலை குறைபாடுகள்
- மோசமாகப் பராமரிக்கப்படும் கருவிகள் அல்லது உபகரணங்கள்
- எந்திர பாதுகாப்புக் கவசங்கள் அல்லது தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்களில் பற்றாக்குறை அல்லது கோளாறு
- பாதுகாப்பற்ற வாகனம் ஓட்டுதல்
- லாக்-அவுட்/டாக்-அவுட் (LOTO) நடைமுறைகளை அல்லது கீழே விழுதல் பாதுகாப்பைப் பயன்படுத்தாமல் இருப்பது
- கழிவுகள் அல்லது அபாயகரமான பொருட்கள் முறையாகப் பயன்படுத்தப்படாமல், கையாளப்படாமல் அல்லது அகற்றப்படாமல் இருத்தல்



### மேலும் வழிகாட்டுதல்


- சுற்றுச்சூழல், சுகாதாரம், பாதுகாப்பு கொள்கை
- உயிர் காக்கும் விதிகள்
- EHS இணைய வாயில்

## பொறுப்பேற்கச் செய்தல்

# பாதுகாப்பு

எது மிக முக்கியமானதோ அதைக் காக்கிறோம் - நம் மக்கள் - அவர்கள் எங்கு பணிபுரிந்தாலும்.

GE Vernova-வுக்காக அல்லது நம் சார்பில் பணிபுரியும் ஒவ்வொருவரும் - அது ஓர் அலுவலகமாகவோ அல்லது தளத்திலோ அல்லது பயணத்தின்போதோ இருந்தாலும் - பணியில் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதை விரும்புகிறோம். அச்சுறுத்தல்கள் அல்லது வன்முறைச் செயல்கள் அல்லது ஒருவரை பாதுகாப்பற்று உணரச் செய்யும் எதையும் சகித்துக்கொள்ள மாட்டோம் - நாம் அதை எப்போதாவது கண்டால், நாம் அதைப் புகாரளிக்க வேண்டும்.



வேலைக்குப் பயணிக்கும் முன்பாக ஊழியர்கள் தங்கள் தனிப்பட்ட GE Vernova பயண வரைவினில் அவசரத் தொடர்புத் தகவல்களைச் சோதித்துப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். பயணிக்கும்போது ஊழியர்கள் எப்போதும் தங்கள் சுற்றுப்புறம் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். பயணிக்கும்போது ஏதேனும் சம்பவங்கள் (இயற்கையானதோ அல்லது மனிதரால் உருவானதோ) அபாயத்தை ஏற்படுத்தக்கூடுமெனில், அந்த ஊழியர்கள் பத்திரமாயிருப்பதை அறிந்துகொள்ள விரும்புகிறோம். எங்களால் தொடர்புகொள்ள முடியாவிட்டால், சூழ்நிலையை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வரும் வேளையில் அந்த நபரின் அவசரத் தொடர்பு நபரைத் தொடர்புகொள்வோம்.

எங்கள் உலகளாவிய பாதுகாப்புக் குழுக்கள் எந்தக் கவலைகளுக்கும் உதவ 24/7 தயாராக உள்ளது.

**கே** **ஒரு சகபணியாளர் என்னிடம் தனது பேட்ஜைத் தொலைத்துவிட்டதாகவும் அதைப் புகாரளிப்பதைத் தவிர்ப்பதற்காக தன்னை கட்டிடத்திற்குள் அனுமதிக்குமாறும் என்னிடம் கேட்டார். அவரை நான் உள்ளே அனுமதிக்கலாமா?**

கூடாது - நீங்கள் அவரை தளப் பாதுகாப்பாளரிடம் செல்லுமாறு கூற வேண்டும். உங்களுக்கு அவரைத் தெரிந்திருந்தாலும், அவர் மீது நம்பிக்கை இருந்தாலும்கூட அணுகலுக்கான பேட்ஜுகள் ஒரு காரணத்திற்காக தனிநபர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன: கட்டிடப் பாதுகாப்பைப் பேண அவை உதவுகின்றன. ஒரு பேட்ஜ் தொலைந்துவிட்டால், அதை உடனடியாகப் புகாரளிக்க வேண்டும். அப்போதுதான் அது செயலிழப்பு செய்யப்பட்டு மாற்றித் தரப்படும். ஒருவரை பாதுகாப்பு அமைப்பைப் புறக்கணிக்க அனுமதிப்பது - ஒரு சகாயமாக இருந்தாலுமே - அது பாதுகாப்பு நெறிமுறைகளை மீறுவதாகவும் தேவையற்ற ஆபத்துக்கு தளத்தை உட்படுத்துவதாகவும் ஆகும்

### மேலும் வழிகாட்டுதல்

- பாதுகாப்புக் கொள்கை
- பாதுகாப்பு அபாயம் & நெருக்கடி மேலாண்மை (SRCM) குழு

## பொறுப்பேற்கச் செய்தல்

# தரம்

நமது ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பாதுகாப்பான, இனக்கமான, நீடித்துழைக்கும் தயாரிப்புகளையும் சேவைகளையும் வழங்குவது நமது பொறுப்பு.

பாதுகாப்பு, தரம், பட்டுவாடா, செலவு - என்ற இதே வரிசையில் - நாம் முன்னுரிமை அளிக்கிறோம். வேலையை அது பாதுகாப்பானதாக இருக்கும்போதும் தரக்கட்டுப்பாடுகளை அமைத்த பிறகும் மட்டுமே தொடங்குவதன் மூலம் இந்தக் கொள்கைகளுக்கு நாம் பொறுப்புடையவர்களாக ஆகிறோம். பாதுகாப்பும் தர எதிர்பார்ப்புகளும் பூர்த்தியாகாவிட்டால் வேலையை நிறுத்தும் அதிகாரம் நமக்குள்ளது. இதையே நமது ஊழியர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கூட்டாளர்களிடம் நாம் எதிர்பார்க்கிறோம். உற்பத்தியிலும் உற்பத்திசாரா பகுதிகளிலும் விழுமியச் சங்கியியிலுள்ள அனைத்துச் செயல்பாடுகளை (வெற்றி, வடிவமைப்பு, வாங்குதல், உருவாக்குதல், நிறைவேற்றுதல்) பூஜ்ஜிய குறைபாட்டின் அடிப்படையில் செயல்படுத்துதல்.

நமது வாடிக்கையாளர்களுக்கு உயர்தரமான தயாரிப்புகளை வழங்குவதை உறுதி செய்வதில் ஒவ்வொருவருக்கும் பங்குள்ளது. நமது தயாரிப்புகளின் பாதுகாப்பு, தரம் மற்றும் செயல்திறன் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு நாம் இணங்கவும் GE Vernova-வின் கொள்கைகளைப் பின்பற்றவும் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் மேலும் மேம்படுத்திக் கொள்ள எங்களுக்கு நாங்களே சவாலை முன்வைக்கும் நிலையில், எங்கள் திசைகாட்டியாக பாதுகாப்பு, தரம், பட்டுவாடா, செலவு (SQDC) என்ற இதே வரிசையில் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

**S பாதுகாப்பு**

GE Vernova தனது பணியாளர்களுக்கும் கூட்டாளர்களுக்கும் ஒரு பாதுகாப்பான பணிச்சூழலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**Q தரம்**

தரமான தயாரிப்புகளையும் சேவைகளையும் வழங்குதல்

**D பட்டுவாடா**

எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சரியான நேரத்தில் பட்டுவாடா செய்தல்

**C செலவு**

எங்களது முதலீட்டாளர்களுக்கு அதிக இலாபத்தை ஈட்டித் தருதல்

நமது தயாரிப்புகளையும் சேவைகளையும் அல்லது நமது நேர்மை கலாச்சாரத்தைத் தரமிழக்கச் செய்யும்படி தரக்கட்டுப்பாடுகளைப் புறக்கணிக்கவோ அல்லது சுருக்குவழியில் செல்வதோ கூடாது. தயாரிப்பு அல்லது செயல்முறை கோளாறுகள் அல்லது நமது தயாரிப்புகள் அல்லது சேவைகளின் பாதுகாப்பு அல்லது நாணயத்தில் சமரசத்தை ஏற்படுத்தும் விலகல் அறிகுறிகளைக் கண்டால், அதை வேறு யாராவது பார்த்துக் கொள்வார்கள் என்று ஒருபோதும் விட்டுவிடக்கூடாது; அதற்குப்பதில் உடனடியாக வேலையை நிறுத்திவிட்டு நமது கவலையை மக்கள் தலைவர் அல்லது தலைவர் அல்லது நெறிகள் & இணக்கக் குழுவிடம் உடனடியாகப் புகாரளிக்க வேண்டும்.

### மேலும் வழிகாட்டுதல்

→ தரக் கொள்கை

பொறுப்பேற்கச் செய்தல்

# துல்லியமான பதிவு பேணுகை


துல்லியமான நிதி சார்ந்த மற்றும் தொழில்சார் பதிவுகளைப் பேணுவது நமது விழுமியங்களுக்கும் சட்டத் தேவைகளுக்கும் ஏற்ற ஒரு முக்கியமான நிறுவன நடைமுறை.

பதிவு பேணுகையானது நாணயத்துடன் தொழில் செய்யும் வழிகளில் ஒன்று. செயல்திறன், நிதிநிலை அறிக்கைகள், பாதுகாப்பு அறிக்கைகள், தரம் மற்றும் அதுபோன்றவற்றின் துல்லியமான பதிவுகளைப் பேணுவது சட்டம் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளையும் பங்குதாரர் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யத் தேவையானவை.

GE Vernova துல்லியமான நிதி சார்ந்த மற்றும் வணிகம் சார்ந்த பதிவுகளை உருவாக்குவதும் பேணுவதும் அறிக்கையிடுவதும் அவசியம். எந்தப் பதிவுகளையும் கணக்குகளை அல்லது பரிவர்த்தனைகளையும் நாம் தவறாகச் சித்தரிப்பது அல்லது திரித்துக் கூறுவது இல்லை. நாம் ஒவ்வொருவருக்கும் - நிறுவனத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் - அனைத்து நிறுவனத் தொழில் மற்றும் நிதிசார் பதிவுகள் அனைத்தின் துல்லியத்தன்மையையும் உறுதிசெய்யும் பொறுப்பு உள்ளது.

### மோசடியைத் தடுத்தலும் புகாரளித்தலும்

உண்மைகளை உள்நோக்கத்தோடு திரிப்பது அல்லது மறைப்பது அல்லது அவ்வாறு செய்ய ஒருவருக்கு உதவுவது மோசடியாகும். திருட்டு, மோசடி, பண மோசடி, மிரட்டிப் பணம் பறித்தல் அல்லது நிறுவனச் சொத்தைத் தவறாகப் பயன்படுத்துவது போன்ற செயல்கள் சட்ட மீறலும் GE Vernova கொள்கை மீறலும் ஆகும். நமது நிதிநிலை அறிக்கையிடலின் நம்பகத்தன்மையையும் நாணயத்தையும் மோசடி சீர்குலைக்கிறது. அதை நீங்கள் பார்த்தாலோ அல்லது சந்தேகித்தாலோ உடனடியாக உங்கள் மக்கள் தலைவர், மனிதவளம், நெறிகள் & இணக்கம் அல்லது ஏதேனும் திறந்த புகாரளிப்பு சேனல்களில் புகாரளியுங்கள்.



### நடைமுறையில்

- பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் துல்லியமாகவும் விரைவாகவும் பதிவுசெய்யுங்கள்
- செயல்திறனுடன் பொருந்தாததாகத் தோன்றும் ஏதேனும் நிதிசார் முடிவுகள் குறித்த கவலையைத் தெரிவியுங்கள் அல்லது புகாரளியுங்கள்
- ஒருபோதும் தவறான அல்லது தவறாக வழிநடத்தும் பதிவீடுகளை அல்லது அறிக்கைகளைத் தராதீர்கள்
- நமது கொள்கைகளைப் பின்பற்றுங்கள். நிறுவனத்தின் சார்பாக ஏற்படும் செலவுகளின்போது தீர்க்கமான அனுமானத்தைப் பயன்படுத்துங்கள்

### மேலும் வழிகாட்டுதல்

கட்டுப்பாட்டுக் கொள்கை



# நிறுவனத்தையும் ஒருவருக்கொருவருமென பாதுகாத்தல்

நமது நிறுவனத்தையும் பொறுப்பேற்கும் கலாச்சாரத்தையும் பாதுகாக்கும்போது, ஒவ்வொருவரும் வெற்றி பெறுகிறார்.

GE Vernova-வுக்காக சரியான காரியத்தைச் செய்வது நாம் தொழில் புரியும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் தீவிரமாக இணங்குவதிலும் நிறுவனக் கொள்கைகளின்படி ஒழுகுவது, நாணயம் மற்றும் பொறுப்பேற்புக் கொள்கைகளின்படி செயல்படுவது ஆகியவற்றில் இருந்து தொடங்குகிறது. பொறுப்பேற்பு என்பது வெறுமனே விதிகளை அறிந்துகொள்வதும் புரிந்துகொள்வதும் மட்டுமல்ல, அது ஒட்டுமொத்த அணியும் ஒவ்வொரு நாளும் அவற்றைப் பின்பற்றுவதை உறுதிசெய்ய நேரம் எடுத்துக் கொள்வதும்தான்.

## நிறுவனத்தையும் ஒருவருக்கொருவருமென பாதுகாத்தல்

# தகவல் பாதுகாப்பு


நமது நிறுவனம், நமது வாடிக்கையாளர்கள், நமது ஊழியர்கள், நமது வழங்குநர்கள் குறித்த தகவல்களைப் பொறுப்புடன் பயன்படுத்துவதுடன் அவற்றைப் பத்திரமாக வைத்திருக்கிறோம்.

நாம் GE Vernova-வின் உடைமையுரிமையில் உள்ள தகவல்களையும், பிற தரப்பினர் நம்மிடம் ஒப்படைத்துள்ள தரவுகளையும் கையாளும் விதம், நமது வணிகக் கூட்டாளிகளுடனான உறவை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் மிகவும் முக்கியமானது.

இதன் அர்த்தம், GE Vernova-க்காக வேலையை நடத்தும்போதும் இரகசியத் தகவல்களைக் கையாளும்போதும் நாம் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளையும் சாதனங்களையும் மட்டுமே பயன்படுத்துகிறோம், இந்தச் சாதனங்களைக் கவனிப்பின்றி பொது வெளிகளில் வைப்பதில்லை என்பதுதான். உள்நுழைவுச் சான்றாதாரங்களைப் பத்திரமாக வைத்திருப்பது, வலுவான கடவுச்சொற்களை உருவாக்குவது, அவற்றை தொடர்ந்து மாற்றுவது மற்றும் GE Vernova-க்காக பணிபுரியாத யாரொருவருடனும் நமது தகவல் வளங்களைப் பகிராமல் இருப்பது போன்ற ஜாக்கிரதை நடைமுறைகளையும் நாம் கடைப்பிடிக்கின்றோம்.

**கே** **எனது GE Vernova மடிக்கணினியிலிருந்து நான் விலகியிருக்கிறேன். நாங்கள் பணிபுரிந்துவரும் ஒரு செயல்திட்டம் குறித்து சகபணியாளருடன் நான் தொடர்புகொள்ள வேண்டியுள்ளது. எனது தனிப்பட்ட மின்னஞ்சல் கணக்கிலிருந்து அவருக்கு நான் மின்னஞ்சல் செய்யலாமா?**

கூடாது. உங்கள் GE Vernova மின்னஞ்சல் கணக்கினை சக பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் அல்லது வழங்குநர்களுடன் வணிகம் தொடர்பான கடிதத் தொடர்புகளுக்கும் அதேபோல (உங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில்) GE Vernova உடைமையுரிமைத் தகவல்களைக் கொண்டுள்ள ஏதேனும் சமாச்சாரங்களை உங்களுக்கு நீங்களே அனுப்பிக் கொள்ளவும் மட்டுமே பயன்படுத்த வேண்டும். உங்கள் GE Vernova மின்னஞ்சலை உங்களால் அணுக இயலாவிட்டால், அங்கீகரிக்கப்பட்ட ஒத்துழைப்புக் கருவிகள் போன்ற மாற்று பாதுகாப்பு தெரிவுகளைப் பரிசீலிக்கலாம் அல்லது உங்கள் நிறுவனக் கணக்கை அணுகும்வரை காத்திருக்கலாம்.



### மேலும் வழிகாட்டுதல்

- ஏற்கத்தக்க பயன்பாடு கொள்கை
- இணையப் பாதுகாப்புக் கொள்கை
- உடைமையுரிமை தகவல் வகைப்பாடு, லேபிள் இடுதல் மற்றும் கையாளுதல் கொள்கை
- தனிப்பட்ட தகவல் பாதுகாப்புக்கான உறுதிமொழி

## நிறுவனத்தையும் ஒருவருக்கொருவருமென பாதுகாத்தல்

# செயற்கை நுண்ணறிவு

அனைத்துப் புதிய, உருவாகிவரும் கருவிகலையும் போலவே செயற்கை நுண்ணறிவையும் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும்.

நமது பணியைத் துரிதப்படுத்துவதில் செயற்கை நுண்ணறிவு (AI) அளப்பறிய இயற்திறனைக் கொண்டுள்ளது: செழிக்கவும் கரியமில வாயுவைக் குறைக்கவும் மின்சாரம் வழங்குதல் நாம் செயல்படும் விதத்தை மேம்படுத்த உதவுவதற்காக நாம் பொதுவில் கிடைக்கக்கூடிய கருவிகளையும் அதேபோல குறிப்பிட்ட பயன்பாட்டுத் தேவைகளுக்கு நமது சொந்த Gen AI கருவிகளை உருவாக்கவும் செய்கிறோம்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களைப் பத்திரமாக, நெறிசார்ந்து பொறுப்புடன் பயன்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இந்தத் துறையின் மிக வேகமான பரிணாமத்தையும் அதிலுள்ள பொது செயற்கை நுண்ணறிவுத் தளங்களோடு தொடர்புடைய தனியுரிமை மற்றும் தரவு நாணய அபாயங்களையும் பார்க்கையில், தரவுப் பாதுகாப்பு தொடர்பாக உள்நிலைக் கொள்கைகளையும் உருவாகிவரும் வழிகாட்டுதல்களையும் கறாராகப் பின்பற்றுகிறோம். அங்கீகரிக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகளை மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம். ஏதேனும் இரகசியமான அல்லது GE Vernova உடைமையுரிமைத் தகவல்கள், மூன்றாம் தரப்பினரின் தரவுகள் அல்லது நுட்பமான தனிப்பட்ட தகவல்களை பொது செயற்கை நுண்ணறிவுச் செயற்தளங்களுக்குள் இடுவதிலிருந்து கட்டுப்படுத்திக் கொள்கிறோம்.

இந்த ஒழுங்குபடுத்திய அணுகுமுறை, நமது நிறுவனம், ஊழியர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் செயற்கை நுண்ணறிவை எங்கள் விழுமியங்களுடன் நாங்கள் பொருத்திக்கொண்டதை உறுதிசெய்வதுடன் ஒழுங்குமுறைத் தேவைகளையும் இது பூர்த்தி செய்கிறது.

### செயற்கை நுண்ணறிவு கருவிகளை முறையாகப் பயன்படுத்துதல்

- ✓ ஏற்கெனவே பொதுவில் கிடைக்கக்கூடிய உள்ளடக்கத்தை வழங்குதல் அல்லது தொகுத்தல்
- ✓ ஒரு வழங்குநருக்கு நன்றி நவிலல் போன்ற மாதிரிகளை வரைதல்
- ✓ இரகசியமில்லா தலைப்புகள் மீது யோசனைகளை உருவாக்குதல் (உ.ம்., குழுவை ஒருங்கிணைக்கும் செயல்பாடுகளுக்கான பிரபலமான உணவகங்கள்)
- ✓ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத அல்லது இரகசியத் தகவல்கள் இன்றி விரிதாள்களில் திரும்பத் திரும்பச் செய்யும் வேலைகளை ஆட்டோமேட் செய்தல் (உ.ம்., தரவு பத்தியிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட ஒரே மாதிரி மதிப்புகளை அகற்ற எக்செல் மேக்ரோவை எழுதுதல்)

**கே** **சமீபத்திய தொழில்துறை போக்குகளைத் தொகுத்தளிக்கும் ஒரு விளக்கக் காட்சியை வரைவதற்கு உதவ பொதுவிலுள்ள செயற்கை நுண்ணறிவுத் தளத்தைப் பயன்படுத்துவது குறித்துப் பரிசீலித்து வருகிறேன். நன்கு பொருத்தமான விளைவைப் பெற சமீபத்திய அனைத்து தொழிலாளர் கூட்டத்தில் பெருமளவில் பகிரப்பட்ட நிறுவனத்தின் ஆழ்ந்த கருத்துகளையும் தரவுகளையும் நான் உள்ளிடலாமா?**

கூடாது. இந்தத் தகவல்கள் முக்கியமற்றவை போலத் தோன்றினாலும் நிறுவனத்துக்குச் சொந்தமான ஆழ்ந்த கருத்துகள் அல்லது தரவுகளை பொது செயற்கை நுண்ணறிவுத் தளங்களில் பகிர்வது நமது இரகசியத் தகவல்களை வெளி ஆட்களுக்கு வெளிக்காட்டுவதாகிவிடும். இதனால் போட்டிரீதியான தீங்கு ஏற்படலாம். பொது செயற்கை நுண்ணறிவு கருவிகளை ஏற்கெனவே பொதுவில் கிடைக்கக்கூடிய அல்லது இரகசியம் அல்லாத தகவல்களுடன் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### *தெரிந்துகொள்வது நல்லது*

ஒரு தகவலை செயற்கை நுண்ணறிவு கருவியில் பகிர்வது பாதுகாப்பானதா என்று உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், உங்கள் மக்கள் தலைவர் அல்லது இணையப் பாதுகாப்புக் குழுவிடம் கேளுங்கள்.

### மேலும் வழிகாட்டுதல்

- **செயற்கை நுண்ணறிவின் ஏற்கத்தக்க பயன்பாடு கொள்கை**
- **செயற்கை நுண்ணறிவு மூலவளங்கள்**

## நிறுவனத்தையும் ஒருவருக்கொருவருமென பாதுகாத்தல்


# சமூக ஊடகம்

நாம் எப்போதும், ஆன்லைனில்கூட ஓரணியாக இருக்கிறோம். நமது ஆன்லைன் நடத்தை நமது பணியிட தொடர்பாடல்களுக்கு வழிகாட்டுதலாக இருக்கும் இதே தொழில் நேர்த்தியை, நன்னெறியை, மரியாதையைக் காட்ட வேண்டும்.

நமது பிராண்டையும் வலுவான பணிசார் உறவுகளையும் கட்டமைப்பதில் சமூக ஊடகம் உதவ முடியும். உதாரணமாக நிறுவனத்தின் சாதனைகளை பெருக்கிக் காட்டுவது, கூட்டாளி நிகழ்ச்சிகளை முன்னிறுத்துவது அல்லது குழு பதிவுகளில் அணித் தோழர்களைக் குறியிடுவது.

தனிப்பட்ட சமூக ஊடகக் கணக்குகளில் பதிவிடும்போது, ஊழியர்கள் தங்களது பொதுச் செயல்பாடு GE Vernova உடன் தொடர்புடையது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு ஊழியர் தன்னை GE Vernova ஊழியராக அடையாளப்படுத்திக்கொள்ளும்போது அல்லது நிறுவனத்தின் சார்பாகப் பேசக்கூடியவராக நியாயமாகக் கருதப்படும்போது, அவர்கள் செய்தித் தொடர்பாளர்களாக இருக்கிறார்கள். அத்தகைய நிலையில் நமது நிலையுடன் பொருந்தக்கூடிய உள்ளடக்கத்தை, பொதுக் களத்துக்கு ஏற்றதை மட்டுமே பதிவிட வேண்டும்.

தொழில்முறையாகவும் மரியாதையாகவும் நடந்துகொள்ளும் பொறுப்பு ஊழியர்களுக்கு உள்ளது. அனைத்து சமூக ஊடகத் தளங்களிலும் பகிரப்படும் எந்தவொரு பதிவிலும், GE Vernova-வின் இரகசிய மற்றும் உடைமையுரிமையுள்ள தகவல்களைப் பாதுகாப்பதும் இதில் அடங்கும்.



### மேலும் வழிகாட்டுதல்

- ஏற்கத்தக்க பயன்பாடு கொள்கை
- மரியாதைக்குரிய பணியிடக் கொள்கை

## நிறுவனத்தையும் ஒருவருக்கொருவருமென பாதுகாத்தல்

# இணையப் பாதுகாப்பு

நமது இயக்கங்கள், தரவுகள் மற்றும் ஒருவரையொருவர் பாதுகாப்பதற்காக நமது கணினி அமைப்புகள், நெட்வொர்க்குகள் மற்றும் சாதனங்களைப் பாதுகாக்கிறோம்.

நமது தயாரிப்பு போர்ட்ஃபோலியோ மற்றும் நமது சொந்த இயக்கங்கள் எங்கிலும் டிஜிட்டல் தீர்வுகளை விரிவுபடுத்துவதில் இணையப் பாதுகாப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஹாக்கிங், மோசடி மின்னஞ்சல், பிணையம் கேட்டல் மற்றும் பிற தாக்குதல்கள் போன்ற இணையத் தாக்குதல்களுக்கு எதிராக GE Vernova-வின் கணினி அமைப்புகள், நெட்வொர்க்குகள் மற்றும் சாதனங்களைப் பாதுகாப்பது நம் அனைவரின் பொறுப்பாகும்.



### நடைமுறையில்


GE Vernova கணினி அமைப்புகள் மற்றும் சாதனங்கள் வணிக நோக்கங்களுக்கானவை மட்டுமே. எனவே நாம் பின்வருவனவற்றை மனதில் கொள்ள வேண்டும்:

- நம்பகமான பயன்பாடுகளை மட்டுமே GE Vernova கணினி அமைப்புகளிலும் சாதனங்களிலும் நிறுவ வேண்டும்
- தனிப்பட்ட மின்னஞ்சல் அல்லது அங்கீகரிக்கப்படாத சாதனங்களைப் பயன்படுத்தக்கூடாது
- மின்னஞ்சல்களிலுள்ள தொடுப்புகள் மற்றும் இணைப்புகளை கிளிக் செய்யும் முன்பு அவற்றைக் கவனமாகச் சோதிக்க வேண்டும்
- GE Vernova தகவல்களை பத்திரமான அங்கீகரிக்கப்பட்ட சேனல்களில் மட்டுமே பகிர வேண்டும்

**கே** **ஒரு அமைப்பு தர மேம்பாடு தொடர்பான மின்னஞ்சல் வந்தது. அதற்கு ஒரு தொடுப்பை கிளிக் செய்து உள்நுழைவு சான்றாதாரங்களைத் தந்து உறுதிசெய்ய வேண்டிய தேவை உள்ளது. இது ஒரு பாதுகாப்பான கோரிக்கையா என்று எப்படி அறிவது?**

இது ஒரு பொதுவான மோசடி மின்னஞ்சல் உத்தி. ஏதாவது அவசரம், அச்சுறுத்தல் அல்லது வழக்கத்துக்கு மாறானதாக நீங்கள் உணர்ந்தால் - குறிப்பாக உங்கள் உள் நுழைவுச் சான்றாதாரங்களைப் பகிர்வது இதில் அடங்கியிருந்தால் - ஒரு நம்பிக்கையான சேனல் மூலம் முதலில் அதைச் சரிபார்ப்பது நல்லது.

எதிர்பாராத அல்லது சந்தேகத்துக்கிடமான மின்னஞ்சல்களில் உள்ள தொடுப்புகள் அல்லது இணைப்புகளை, அவை நிறுவனத்துக்குள்ளிருந்து வருவதாகத் தோன்றினாலும்கூட அவற்றை ஒருபோதும் கிளிக் செய்யாதீர்கள். மாறாக, உங்கள் அவுட்லுக் மின்னஞ்சலில் “Report Phish” பொத்தானை கிளிக் செய்து செய்தியைப் புகாரளியுங்கள்.




### மேலும் வழிகாட்டுதல்

- இணையப் பாதுகாப்புக் கொள்கை
- இணையப் பாதுகாப்பு இணைய வாயில்

## நிறுவனத்தையும் ஒருவருக்கொருவருமென பாதுகாத்தல்

# தனியுரிமை

### தங்களது தனிப்பட்ட தகவல்களை மதிப்பதன் மூலம் மற்றவர்கள் நம்மீது வைக்கும் நம்பிக்கையை நாம் மதிக்கிறோம்.

தங்களது தனிப்பட்ட தகவல்களை மதிப்பதன் மூலம் மற்றவர்கள் நம்மீது வைக்கும் நம்பிக்கையை நாம் மதிக்கிறோம்.


தனியுரிமையை மதிப்பது நாமும் நமது வாடிக்கையாளர்களும் GE Vernova-இல் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பேணுவதன் ஒரு பகுதியாகும். தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்புக்கான தனியுரிமைச் சட்டங்களுக்கும் GE Vernova-இன் உறுதிப்பாட்டுக்கும் நாங்கள் இணங்குகிறோம். எங்கள் வணிகக் கூட்டாளர்களும் தனியுரிமை மற்றும் தரவுப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி ஒழுகுவதையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். தனிப்பட்ட தகவல்கள் நமது வேலைக்கு அத்தியாவசியமானது என்றால் மட்டுமே அணுக வேண்டும். தேவையான காலத்துக்கு மட்டுமே வைத்திருந்து பின்னர் அழித்துவிட வேண்டும்.

தனிப்பட்ட தகவல்கள் தொடர்பான ஏதேனும் அபாயங்கள் அல்லது சம்பவங்களை நீங்கள் எதிர்கொண்டால் தாமதமின்றி அவற்றைப் புகாரளிக்க வேண்டும். ஒரு தனியுரிமை அறிக்கை வாயிலாக உங்கள் மக்கள் தலைவரிடம், உங்கள் வணிக தனியுரிமைத் தலைவர் அல்லது ஏதேனும் திறந்த புகாரளிப்பு சேனல்கள் மூலம் புகாரளிக்கலாம்.

தனியுரிமைத் தகவல்களைப் பாதுகாப்பதில் நம் ஊழியர்கள் அனைவருக்கும் பொறுப்பு உள்ளது. இந்தக் கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் நம்பிக்கையைப் பேணவும் தனிநபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் நமது செயல்பாடுகளில் நாணயத்தை நிலைநிறுத்தவும் நாம் உதவுகிறோம்.

**கே** **ஒரு செயல்திட்டத்தில் நான் உதவிக் கொண்டிருந்தபோது முந்தைய உத்தியோகத்தில் ஊழியர் சம்பளப் பட்டியல் விபரங்கள் அடங்கிய கோப்புறைக்கான அணுகல் இன்னும் எனக்கிருப்பதைப் பார்த்தேன். அதை நான் இப்போது பயன்படுத்துவதில்லை. ஆனால் எதிர்காலப் பகுப்பாய்வுக்கு அது பயனுள்ளதாக இருக்கலாம் என்று நினைத்தேன். ஒருவேளை தேவைப்பட்டால் ஒரு நகலை நான் வைத்துக் கொள்ளலாமா?**

இல்லை. தனிப்பட்ட தகவல்களை தெளிவான, சட்டப்பூர்வ வணிகத் தேவை இருக்கும்போது மட்டுமே அதை அணுகவும், பயன்படுத்தவும் அல்லது பகிரவும் வேண்டும். அந்தத் தரவுகளை வைத்திருப்பது நிறுவனத்தின் தனியுரிமை தரநிலைகளையும் சட்டத் தேவைகளையும் மீறுவதாகும். உங்களுக்கு இனி அணுகல் தேவையில்லை என்றால், உங்கள் மக்கள் தலைவருக்கு அல்லது பொருத்தமான தரவு உரிமையாலருக்குத் தெரியப்படுத்துங்கள். இதனால் உங்கள் அணுகல் நீக்கப்படலாம்.



### *தனிப்பட்ட தகவல்கள் என்றால் என்ன?*

ஒரு தனிநபரை பெயர்கள், ஊழியர் அடையாள எண்கள், வீட்டு முகவரிகள் அல்லது ஊதிய விபரங்கள் உட்பட எந்தத் தரவுகளையும் கொண்டு அடையாளம் காணக் கூடியவை.

### மேலும் வழிகாட்டுதல்

தனியுரிமைக் கொள்கை

## நிறுவனத்தையும் ஒருவருக்கொருவருமென பாதுகாத்தல்

# அறிவுசார் சொத்து

நமது புதுமைகளையும் பிராண்டையும் காப்பதும் நமது போட்டித் திறனைப் பேண உதவுகிறது.

பொறியியல், உற்பத்தி, ஆராய்ச்சி, இயக்கங்கள், வணிகம் மற்றும் பல உள்ளிட்ட வெவ்வேறு பணிகளில் திறமையானோரை நாம் உலகெங்கிலும் பணியமர்த்துகிறோம். ஒன்றாக இணைந்து நாம் போட்டித்திறனை வழங்கும் தயாரிப்புகளையும் சேவைகளையும் உருவாக்குகின்றோம். இதை அறிவுசார் சொத்து (IP) உரிமைகள் மூலம் நாம் பாதுகாக்கின்றோம்.

GE Vernova-வின் அறிவுசார் சொத்து நாம் என்ன வடிவமைக்கிறோம், உருவாக்குகிறோம், பயன்படுத்துகிறோம் என்பதன் அடித்தளத்தை உருவாக்குகிறது. உலகை மாற்றும் சக்தியைப் பயன்படுத்துவது என்பது நமது அறிவுசார் சொத்தில் முதலீடு செய்வதும் பாதுகாப்பதும் ஆகும். நமது பொறியியல் மற்றும் பிற ஆவனங்கள் முறையாக வகைப்படுத்தப்பட்டு லேபிள் இடப்பட்டு கையாளப்பட வேண்டும். ஏதேனும் நவீன, புதிய அல்லது GE Vernova-க்குப் பயனுள்ளதை நாம் உருவாக்கினால் சட்டத்துறைக்கு சரியான நேரத்தில் தெரியப்படுத்த வேண்டும். இதனால் முறையான அறிவுசார் சொத்துரிமைகள் மூலம் அதை நாம் பாதுகாக்க முடியும்.

நமது தொழில்நுட்பத்தைத் தாண்டி, GE Vernova-வின் அறிவுசார் சொத்துக்களில் நமது பிராண்டு, GE Vernova பெயர் மற்றும் லோகோ, உலகுக்கு நமது சரக்குகள் மற்றும் சேவைகளை பிரத்யேகமாக அடையாளம் காண நாம் பயன்படுத்தும் பிற வணிக முத்திரைகள் மற்றும் லோகோக்கள் உள்ளிட்டவை அடங்கும். நமது தகவல் தொடர்புகளில் அந்த பிராண்டுகளை முறையாகப் பயன்படுத்துவதும் பாதுகாப்பதும் சந்தைப்படுத்துவதும் தொழில்துறையில் நமது நிலையையும் நற்பெயரையும் வலுப்படுத்த உதவும்.

மற்றவர்களின் சரியான அறிவுசார் சொத்துரிமைகளையும் நாம் மதிக்கிறோம். உரிமைமீறலைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறோம். இதில், உதாரணமாக GE Vernova-வில் நமது வேலையின்போது முந்தைய தொழில் உரிமையாளர்களிடமிருந்து தகவல்களை நாம் கொணர்வதில்லை என்று உறுதிப்படுத்துதல் அடங்கும்.

### *நமது அறிவுசார் சொத்து உதாரணங்கள்*

அறிவுசார் சொத்து என்பது கண்டுபிடிப்புகள், புதிய ஆக்கங்கள், உற்பத்தி முறைகள், நமது வணிக முத்திரைகள், வணிகத் திட்டங்கள், சந்தைப்படுத்தல் பொருட்கள், மென்பொருள், வரைபடங்கள், நிறுவனத்திற்குச் சொந்தமான புகைப்படங்கள், தயாரிப்பு விவரக்குறிப்புகள், விநியோகிப்பாளர் விவரங்கள் மற்றும் வாடிக்கையாளர் கொள்முதல் வரலாறுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது – இவை அனைத்தும் காப்புரிமைகள், வணிக ரகசியங்கள், வர்த்தக முத்திரைகள், பதிப்புரிமைகள் மற்றும் வடிவமைப்புகள் மூலம் பாதுகாக்கப்படுகின்றன. GE Vernova-வில் பணியில் இருக்கும்போது உருவாக்கப்பட்ட அறிவுசார் சொத்துக்கள் நிறுவனத்திற்கே சொந்தமானவை.

### மேலும் வழிகாட்டுதல்

→ **அறிவுசார் சொத்து கொள்கை**

→ **GE Vernova உடைமையுரிமை தகவல் வகைப்பாடு, லேபிள் இடுதல் மற்றும் கையாளுதல் கொள்கை**

## நிறுவனத்தையும் ஒருவருக்கொருவருமென பாதுகாத்தல்

# சட்டவிரோத பணப்பரிமாற்றத் தடுப்பு

நமது வணிகத்தைச் சட்டப்பூர்வமாக நடத்த உறுதிபூண்டுள்ளோம். இதையே நமது வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

குற்றவியல் நடவடிக்கைகளில் அல்லது நெறியற்ற தொழில் நடைமுறைகளில் தற்போது அல்லது முன்பு ஈடுபட்டிருந்த யாருடனும் அறிந்தே நாங்கள் ஈடுபட மாட்டோம். நாங்கள் முழுமையான ஆய்வினை நடத்துகிறோம். சட்டப்படியானதும் எங்கள் தரநிலைகளுக்குப் பொருந்தும் நிதியளிப்பையும் மட்டுமே ஏற்கிறோம். இந்தத் தரநிலைகளைக் கறாராகப் பின்பற்றுவது நிதிசார் குற்றங்களில் இருந்து நமது நிறுவனத்தைல் காக்கவும் உலகளாவிய பணப் பரிமாற்றத் தடுப்பு மற்றும் ஊழல் முயற்சிகளுக்கு எதிர்ப்பை ஆதரிக்கவும் நமது பங்குதாரர்கள் GE Vernova மீது வைத்துள்ள நம்பிக்கையை வலுப்படுத்தவும் உதவும்.

### நடைமுறையில்

எழுப்ப வேண்டிய கவலைகள்:

- ஒரு தொழில் உறவினை நிறுவும்போது தவறான தகவல்களை வழங்குவதற்கான ஒரு வாடிக்கையாளரின் முயற்சிகள்
- பணத் திருப்பங்களுக்கான கோரிக்கைகளோடு வரக்கூடிய ரொக்கச் செலுத்துகைகள் அல்லது அதீதச் செலுத்துகைகள்
- மூன்றாம் தரப்பு செலுத்துகைகள், எ.கா., கட்டணம் செலுத்த வேண்டிய வாடிக்கையாளரைத் தவிர மற்ற தரப்பினரால் செய்யப்படும் செலுத்துகைகள்
- வாடிக்கையாளரின் எதிர்பார்த்த நடவடிக்கையோடு பொருந்தாத வழக்கத்துக்கு மாறான ஆர்டர்கள் அல்லது பரிவர்த்தனை
- வழக்கத்துக்கு மாறான சிக்கலான கொடுக்கல் வாங்கல் வடிவமைப்புகள் அல்லது பரிவர்த்தனையோடு தொடர்பில்லாத நாட்டுக்கு அல்லது அங்கிருந்து நிதிகள்

### மேலும் வழிகாட்டுதல்

→ சட்டவிரோத பணப்பரிமாற்றத் தடுப்பு கொள்கை



## நிறுவனத்தையும் ஒருவருக்கொருவருமென பாதுகாத்தல்

# உள்வழித் தகவல் மூலம் வர்த்தகம்

உள்வழித் தகவல்களை நாம் பயன்படுத்தவோ வெளிப்படுத்தவோ மாட்டோம்.

உள்வழித் தகவல்களுக்கான அணுகலில் பொறுப்பு உள்ளது. பொதுவில் இல்லாத தகவல் (MNPI) சமாச்சாரங்களுக்கான அணுகல் உங்களிடம் இருந்தால், நீங்கள் அதைப் பாதுகாக்க வேண்டும்; அதை ஒருபோதும் பகிரவோ அல்லது அதைப் பயன்படுத்தி பங்குகளை வாங்கவோ விற்கவோ கூடாது - அது GE Vernova பங்குகளாக இருந்தாலும் சரி அல்லது நாம் வணிகம் செய்யும் நிறுவனமாயினும் சரி.

உள்வழித் தகவல் மூலம் வர்த்தகம் மற்றும் பங்கு உள்நிலைத் தகவல் கசிவு தொடர்பான சட்டங்களுடன் இணங்குவது முதலீட்டாளரின் நம்பிக்கைக்கு ஆதரவளிக்கவும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுக்கு GE Vernova-வின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டவும் செய்கிறது. பங்குதாரர்களுடன் நம்பகத்தன்மையைப் பேணுவதிலும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடன் இணங்குவதிலும் இந்தத் தகவல்களைப் பாதுகாப்பது முக்கியமானது.

தனிப்பட்ட அல்லது நிதிசார் ஆதாயத்துக்காக MNPI-ஐ எந்தவிதத்திலும் தவறாகப் பயன்படுத்துவதை GE Vernova பொறுத்துக் கொள்வதில்லை. நாங்கள் MNPI-ஐ மற்றவர்களுடன், ஏன் நண்பர்கள் அல்லது குடும்பத்துடன்கூடப் பகிர்வதில்லை. ஏனெனில் இது அவர்கள் சட்டவிரோதமாக வர்த்தகம் செய்ய ஏதுவாகும். அவ்வாறு செய்வது நம்பிக்கையைக் குலைத்து, சட்ட மீறலை ஏற்படுத்தி நெறிசார் தொழில் நடத்தைக்கான நமது உறுதிப்பாட்டுக்கு எதிராகச் செல்லும்.

### *MNPI என்றால் என்ன?*

MNPI என்பது இன்னும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படாத நிலையில் ஒரு நியாயமான முதலீட்டாளர் பங்குகளை வாங்க, விற்க, வைத்திருக்க முடிவு செய்கையில் முக்கியமானதாகக் கருதும் ஏதேனும் தகவலைக் குறிக்கும். உதாரணங்களில் நிதிநிலை அறிக்கைகள், திட்டமிட்ட இணைப்புகள் அல்லது கையகப்படுத்தல்கள், தலைமை மாற்றங்கள், புதிய தயாரிப்பு கொண்டுவருதல் அல்லது கணிசமான ஒப்பந்த வெற்றிகள் அல்லது இழப்புகள் உள்ளிட்டவை அடங்கும்.

**உள்வழித் தகவல் மூலம் வர்த்தகம்** என்றால், நிறுவனம் குறித்த MNPI உங்களிடம் இருக்கும்போது பங்குகளை அல்லது பிற நிறுவனப் பங்குகளை வாங்குவது அல்லது விற்பதைக் குறிக்கும்.

**உள்நிலைத் தகவல் கசிவு** என்றால் நிறுவனம் குறித்த MNPI-ஐ பங்குகளை அல்லது பிற நிறுவனப் பங்குகளை பின்னர் வாங்கவோ அல்லது விற்கவோ செய்யும் ஒருவருடன் பகிர்வதைக் குறிக்கும்.

**கே** **இரவுணவின்போது எனது சகோதரியிடம் நம் நிறுவனம் ஒரு பெரிய ஒப்பந்தத்தை ஒரு புதிய வாடிக்கையாளருடன் கையொப்பமிட்டுள்ளது, அது இன்னும் அறிவிக்கப்படவில்லை என்று கூறினேன். எங்கள் உரையாடலுக்குப் பிறகு அவள் பங்குகளை வாங்கியதாக அறிந்தேன்.**

ஆம். பொதுவுக்கு வராத தகவல்களைப் பகிர்வது - அறிவிக்கப்படாத ஒப்பந்தம் போன்றவை - நிறுவனக் கொள்கையையும் உள்வழித் தகவல் மூலம் வர்த்தகச் சட்டங்களையும் மீறுவதாகும். நீங்கள் வெளிப்படையாக பங்கு வர்த்தகம் செய்ய அல்லது தனிப்பட்ட ஆதாயம் பெற அறிவுரை தந்திருக்காவிட்டாலும் இந்த "தகவல் கசிவு" உங்களுக்கும் உங்கள் சகோதரிக்கும் தீவிரமான சட்ட மற்றும் ஒழுங்குமுறை பின்விளைவுகளுக்கு இட்டுச் செல்லும். இரகசிய தொழில் தகவல்களை பொதுவில் அதிகாரப்பூர்வமாக அது அறிவிக்கப்படும்வரை எப்போதும் தனிப்பட்டதாக வைத்திருங்கள்.

### மேலும் வழிகாட்டுதல்

→ உள்வழித் தகவல் மூலம் வர்த்தகம் மற்றும் உள்நிலைத் தகவல் கசிவு கொள்கை

# மூலவளங்கள்

நீங்கள் ஒரு குறையைப் புகாரளிக்க விரும்பினாலும் அல்லது கேள்வியைக் கேட்க விரும்பினாலும் கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

## ஒரு குறையைப் புகாரளிக்க

- ஆன்லைன்
- எங்கள் உதவி எண்ணை அழையுங்கள்
- மின்னஞ்சல்


## அல்லது நீங்கள் தொடர்புகொள்ளலாம்:

- உங்கள் குறைகேள் அதிகாரி
- மக்கள் தலைவர்
- நெறிகள் & இணக்கம்
- சட்டம்
- மனித வளங்கள்



## எங்கள் நாணய நுழைவாயிலுக்கும் [integrity.gevernova.com] பின்வரும் காரணங்களுக்காக நீங்கள் வருகைதரலாம்:

- ஒரு தொழில் இணக்கத் தலைவரைக் கண்டறிய
- ஒரு குறையைப் புகாரளிக்க
- கொள்கைகளை மறுபார்வையிட
- பயிற்சி வளங்கள், காணொளிகள், தகவல் விளக்கப்படங்களை அணுக



GE VERNOVA